KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA
Jabatan Pendidikan Negeri Perak

*Ticket to victory* **SPM**

# KESUSASTERAAN TAMIL SPM
# எஸ்.பி.எம். தமிழ் இலக்கியம்

## FORMAT KSSM MULAI TAHUN 2021

SEKTOR PEMBELAJARAN
JABATAN PENDIDIKAN NEGERI PERAK
We Deliver

# Pendahuluan

Jabatan Pendidikan Negeri Perak dengan kerjasama guru-guru cemerlang telah menghasilkan Ticket To Victory yang disediakan berdasarkan Kurikulum Standard Sekolah Menengah (KSSM) Tingkatan 5. Penghasilan modul ini hasil sumbangan tenaga guru - guru negeri Perak mengandungi contoh soalan mengikut topik dan skema jawapan bagi mata pelajaran Kesusasteraan Tamil berdasarkan format baharu peperiksaan Sijil Pelajaran Malaysia mulai tahun 2021.

Ticket To Victory disediakan dalam format dokumen mudah alih (pdf) dan boleh digunakan semasa pengajaran dan pembelajaran (PdP) atau digunakan sebagai bahan latihan pengukuhan, pengayaan dan kerja rumah. Bahan ini juga boleh dijadikan panduan kepada guru-guru untuk membina item soalan mengikut format SPM. Justeru itu, diharap penggunaan Ticket to Victory dapat dimanfaatkan sebaik mungkin demi kecemerlangan SPM di negeri Perak berte-patan dengan slogan Jabatan Pendidikan Negeri Perak iaitu “We Deliver”.

Sektor Pembelajaran,
Jabatan Pendidikan Negeri Perak
JalanTawas Baru Utara,
Tasek Damai,
30010, Ipoh, Perak Darul Ridzuan
Tel: 05-2922745 /05-292 3603
Faks: 05–2923851

Hak Cipta Terpelihara 2021

JABATAN PENDIDIKAN NEGERI PERAK We Del/ver

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA
Jabatan Pendidikan Negeri Perak

# AMANAT & PENGHARGAAN



Dr Mohd Suhaimi bin Mohamed Ali, PCM

*Pengarah Pendidikan Negeri Perak*

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

Assalamualaikum warahmatullahi wabarakatuh dan Salam Sejahtera.

Setinggi-tinggi kesyukuran kita merafakkan ke hadrat Allah SWT kerana dengan belas ihsan, limpah kurnia dan izin-Nya, Modul Ticket To Victory Bidang Bahasa yang merangkumi mata pelajaran Bahasa Melayu, Bahasa Inggeris, Bahasa Arab, Bahasa Cina dan Bahasa Tamil dapat dihasilkan. Modul ini selaras dengan format KSSM oleh Bahagian Pembangunan Kurikulum (BPK) dan format pentaksiran yang baharu bagi SPM tahun 2021 oleh Lembaga Peperiksaan, Kementerian Pendidikan Malaysia.

Penghasilan modul ini merupakan usaha murni yang memerlukan kolaboratif akrab antara Sektor Pembelajaran, Jabatan Pendidikan Negeri Perak, Pejabat Pendidikan Daerah dan guru-guru yang berpengalaman dalam menterjemahkan hasrat Kementerian Pendidikan Malaysia untuk menyediakan dan melahirkan murid holistik yang dapat bersaing di peringkat global.

Diharapkan penghasilan modul ini dapat merealisikan misi dan visi pendidikan negeri Perak dan mengangkat kecemerlangan pendidikan negeri ini. Pegawai di JPN, PPD dan pentadbir sekolah serta warga pendidik perlu memastikan *Modul Ticket To Victory* dapat dioptimumkan penggunaannya agar matlamat untuk merealisasikan misi iaitu penyampaian pendidikan berkualiti untuk membangun sekolah unggul bagi menyediakan murid kalis masa hadapan terlaksana.

Setinggi-tinggi ucapan tahniah dan syabas kepada para pegawai Sektor Pembelajaran JPN dan PPD serta guru-guru yang bergabung tenaga dan idea dalam penghasilan modul ini. Sesungguhnya besar harapan kita agar *Modul Ticket To Victory* ini dapat dimanfaatkan oleh semua guru dan murid dengan sebaik-baiknya sehingga dapat memberi impak besar kepada kemenjadian murid khususnya dalam peperiksaan Sijil Pelajaran Malaysia (SPM).

Akhir kata bersamalah kita memohon hidayah daripada Allah SWT, semoga segala usaha murni yang dilakukan ini akan menghasilkan kejayaan yang berterusan bagi pendidikan di negeri Perak.

Sekian, terima kasih.

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA
Jabatan Pendidikan Negeri Perak

# AMANAT & PENGHARGAAN



PUAN HJH. RAHIMAH BINTI MOHAMED, AMP
*Timbalan Pengarah Pendidikan,*
*Sektor Pembelajaran*
*Jabatan Pendidikan Negeri Perak*

JABATAN PENDIDIKAN NEGERI PERAK We Deliver

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

Assalamualaikum Warahmatullahi wabarakatuh dan Salam *"We Deliver"*

Alhamdulillah dengan izin dan inayah-Nya, Modul *Ticket To Victory* bidang Bahasa Sektor Pembelajaran telah dihasilkan dan melibatkan mata pelajaran Bahasa Melayu, Bahasa Inggeris, Bahasa Arab, Bahasa Cina dan Bahasa Tamil. Saya mengambil kesempatan di sini untuk mengucapkan penghargaan terima kasih kepada pegawai mata pelajaran Sektor Pembelajaran, pegawai SISC+ dan guru-guru berpengalaman yang sentiasa memberikan sokongan kepada Jabatan Pendidikan Negeri Perak sehingga terhasilnya modul ini.

Calon Sijil Pelajaran Malaysia (SPM) 2021 ini merupakan calon pertama yang akan menggunakan format SPM baharu Kurikulum Standard Sekolah Menengah (KSSM) apabila pelaksanaan KSSM yang mula diperkenalkan pada tahun 2017 menggantikan Kurikulum Bersepadu Sekolah Menengah (KBSM). Format baharu peperiksaan SPM mula diperkenalkan sejajar dengan pengenalan Dokumen Standard Kurikulum dan Pentaksiran (DSKP). Sehubungan dengan itu, penghasilan Modul *Ticket To Victory* ini sangat sesuai dan relevan untuk dijadikan panduan kerana kandungannya menepati format SPM baharu 2021. Modul ini juga merupakan salah satu strategi untuk membantu meningkatkan pencapaian SPM di negeri Perak yang selari dengan visi Jabatan Pendidikan Negeri Perak, "Pendidikan Berkualiti, Sekolah Unggul dan Murid Holistik".

Saya berharap agar kita bersama-sama mengamalkan prinsip *Open The New Horizon* iaitu dengan menilai dan menganalisis strategi dan taktikal agar dapat melakukan penambahbaikan dalam pendidikan. Prinsip ini menjadi batu loncatan dan motivasi untuk kita melakukan inisiatif dan tindakan yang *challenge the process*. Usaha gigih dan komitmen daripada semua yang terlibat menggambarkan kualiti para pendidik di negeri Perak berada pada tahap yang sangat cemerlang. Teruskan usaha murni dengan menyediakan modul-modul berinovasi dan kompetitif yang dapat memberikan impak besar kepada kecemerlangan murid-murid di negeri Perak.

Semoga matlamat dan usaha murni ini dapat membantu murid-murid menggapai cita-cita mereka untuk cemerlang dalam peperiksaan Sijil Pelajaran Malaysia nanti.

Insya-Allah.

# Panel Penggubal Modul



**KARTHIGESU A/L LETCHUMANAN**
SMK KAMUNTING
KAMUNTING, PERAK



**KARTHIGESU A/L LETCHUMANAN**
SMK KAMUNTING
KAMUNTING, PERAK



**KARTHIGESU A/L LETCHUMANAN**
SMK KAMUNTING
KAMUNTING, PERAK

# Isi Kandungan Modul


| Set Soalan Modul Cemerlang SPM | Mukasurat |
|---|---|
| Set 1 | 1 |
| Set 2 | 7 |
| Set 3 | 14 |
| Set 4 | 21 |

| Skema Set Soalan Modul Cemerlang SPM | Mukasurat |
|---|---|
| Set 1 | 28 |
| Set 2 | 36 |
| Set 3 | 46 |
| Set 4 | 55 |

(எல்லா விடைகளும் பாடப் பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.)

**பாகம் - ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளில் உள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

அழுக்காறு கொண்டிலங்கும்
ஆமைகளின் கூட்டத்தில்
**இழுக்காறு மாற்றுதற்கே**
எண்ணிவந்த பித்தனடா!

தெள்ளுதமிழ் நீதியெலாம்
தேய்கின்ற கூட்டத்தில்
வள்ளுவனை வாழவைக்க
வந்தவன்நான் பித்தனடா!

**(கவிவாணர் ஐ.உலகநாதன்)**

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது? (2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **நயங்கள்** இரண்டனை எழுதுக (4 புள்ளி)

3. (i) **இழுக்காறு மாற்றுதற்கே** என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

தெள்ளுதமிழ் நீதியெலாம்
தேய்கின்ற கூட்டத்தில்
வள்ளுவனை வாழவைக்க
வந்தவன்நான் பித்தனடா!

3. (ii) சமுதாயத்தைச் சீர்படுத்த கவிஞர் என்ன முயற்சியை மேற்கொண்டுள்ளார்? (2 புள்ளி)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. கவிச்சக்கரவர்த்தி நாடக ஆசிரியர் பெற்ற **விருதினைக்** குறிப்பிடுக (2 புள்ளி)

5. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் **சோழனின் பகைவர்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **சமுதாயப்பின்னணி** யாது? (2 புள்ளி)

6. கீழ்க்காணும் கூற்றை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

புலவர் -1 : கம்பரே,எழுபது பாடல்கள் கொண்ட ஒரு சிறு பிரபந்தம். இதை இயற்றி இந்தச் சிற்றூரில் அரங்கேற்றிவிட்டதற்காகச் சக்கரவர்த்தியை இப்படித் துரும்பாக எண்ணுவது விபரீதமாக இருக்கிறது. வேண்டாம் இது புலமைக்கு அழகல்ல.

கம்பர் : புலவரே, நான் பாடல் இயற்றாத காலத்திலும் பாமரனாகத் திருவழுந்தூரில் கம்பங் கொல்லை காத்த நாளிலும் அரண்மனையை நாடியவன் அல்ல. அன்றும் இன்றும் என்றும் என்னைக் காப்பவர்கள் வேளாளர்களே. உயிர் கொடுத்துக் காப்பவர்களை விட்டு விட்டு, சோழன் சபைக்கு நானே **வலியச் செல்வது எதற்காக?**

குணவீர : கம்பரே, உமது வித்யா கர்வத்தை மெச்சுகிறேன். அதைப் புரிந்துகொள்ள கூடிய புலவன் தான் நானும். நீர் என்னோடு நடந்து வரவேண்டாம். சக்கரவர்த்தியிடமிருந்து தக்க மரியாதைகளுடன் அழைப்பு வந்தால், அன்றாவது நீ ராஜ சபைக்கு வருவீர் அல்லவா?

*(அங்கம் 1, காட்சி 1, பக்கம் 25-26)*
*(பாரி நிலையம், பதிப்பு 2015)*

(i) இச்சூழலில் வெளிப்படும் கம்பரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணியை** எழுதுக. (2 புள்ளி)

(iii) **வலியச் செல்வது எதற்காக?** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாவல்

7. அகல்விளக்கு நாவல் ஆசிரியர் ஈடுபட்ட துறை ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

8. (i) வேலய்யனின் தங்கை பெயரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) அகல்விளக்கு நாவலின் படிப்பினைகளுள் ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

9. கீழ்க்காணும் கூற்றை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> "கிராமத்தில் பொதுவாக இவ்வளவு அறிவு நுட்பம் வாய்ந்த பிள்ளைகளைக் காண்பதே அரிது. இந்தப் பிள்ளையின் கல்வியைப் பாழாக்குவதா! அது என்ன பிடிவாதம்! போகலாம் வாருங்கள். நான் போய் அவனுடைய தந்தையிடம் பேசுவேன்" என்று சொல்லி எழுந்தார்.
>
> சந்திரனுடைய தந்தையாரைக் கண்டதும், "உங்கள் குடும்ப நன்மைக்காக வந்திருக்கிறேன். தவறாக எண்ணக்கூடாது. நான் சொல்வதைப் பொறுமையாக எண்ணிப் பார்க்க வேண்டும். ஒன்றும் அவசரம் இல்லை. ஒரு வாரம் இரண்டு வாரம் கழித்து முடிவுக்கு வரலாம்" என்று அடிப்படையிட்டுப் பேசத் தொடங்கினார். தம் நோக்கத்தை எடுத்துரைத்தார்
>
> சாமண்ணா பொறுமையோடு கேட்டிருந்து, முடிவில் பழையபடி தம் தத்துவத்தை விளக்கினார். இன்ஸ்பெக்டர் சிரித்தார். "கலைமகள் வலிய உங்கள் வீட்டைத் தேடிக்கொண்டு வருகிறாள். நீங்கள் திரும்பிப் போகுமாறு சொல்லி வழியடைக்கிறீர்கள். உங்களுக்குத்தான் இந்த ஊரில் எல்லோரையும்விட நிலபுலம் மிகுதி என்று கேள்வி. நீங்களே இப்படிச் சொல்லிப் பயந்தால்" என்று நிறுத்தினார்.
>
> "இந்தக் காலத்தில் எப்படி அய்யா நம்புவது? நம் குடும்பத்தில் நம் வசமாக இருக்கும் வரையில்தான் நம்முடைய பிள்ளை. வெளியே போனால் அப்புறம் சொல்ல முடியாது" என்று சாமாண்ணா கொஞ்சம் நெகிழ்ந்தாற்போல் பேசினார்.
>
> *(அத்தியாயம் 2, பக்கம் 30-31)*
> *(பாரி நிலையம், பதிப்பு 2015)*

(i) இச்சூழலில் வெளிப்படும் கல்வி அதிகாரியின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **உத்திமுறையை** எழுதுக. (2 புள்ளி)

(iii) **வழியடைக்கிறீர்கள்?** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பாகம் - இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை

**மாணவர்க்கு**

ஆசானைத் தந்தையென வணங்க வேண்டும்
அவர்சொல்லும் அறிவுரைக்கும் இணங்க வேண்டும்
கூசாமல் தன்கருத்தைக் கூற வேண்டும்
குற்றமுண்டேல் ஒப்பிமனம் மாற வேண்டும்
மாசான வார்த்தையெதும் ஆசான் மாட்டு
மறந்தேனும் ஒருபோதும் பேசான் என்ற
ஆசாரம் உள்ளவனே நல்ல சீடன்
அறனறிந்த நல்வாழ்விற் கருக னாவான்

குருபக்தி இல்லாத கார ணத்தால்
குழப்பங்கள் பள்ளிகளில் குமுறக் கண்டோம்
தருபுத்தி ஆசானைத் தாக்கிப் பேசித்
தமக்கேதோ உரிமையெனத் தருகிக் கொண்டு
கருமத்தைக் கல்விதனைக் கருதி டாமல்
கடமைமறந் துரிமைபுகல் கட்சி கட்டும்
சிறுபுத்தி மாணவரைச் சேர்ந்து விட்டால்
சீரழியும் பள்ளிகளின் சிறந்த சேவை!

ஓதலினும் மிகச்சிறந் தொழுக்க மாகும்
உண்மைதனை மாணவர்கள் உணர வேண்டும்
மேதினியில் சிறப்படைந்த மேலோ ரெல்லாம்
மேன்மையுற்ற காரணம்நல் லொழுக்க மேதான்
வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்
வெற்றிகளும் நல்லொழுக்கம் விரவி னோர்க்கே!
ஆதலினால் மாணவர்நல் லொழுக்கம் தன்னை
ஆருயிர்போல் கருதிஅதைக் காக்க வேண்டும்

பெற்றோர்கள் மிகப்பெரிதும் வறிய ரேனும்
பெற்றமகன் கல்விகற்றால் போது மென்ற
வற்றாத ஆசையினால் வாடித் தேடி
வயிறார உண்ணாதும் வருந்திச் சேர்த்துப்
பற்றோடும் அனுப்புகின்ற பணத்தை யெல்லாம்
பட்டணத்துப் பகட்டுகளில் பாழாக் கிடாமல்
சிற்றாசை களிற்களித்துச் சீர்கெ டாமல்
சிந்தனையைக் கல்விக்கே செலுத்த வேண்டும்.

-பாப்பாப் பாவலர் முனைவர் முரசு நெடுமாறன்-

10 மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**ரப்பரும் தமிழனும்**

எங்கிருந்தோ தமிழனைப்போ லிங்கெழுந்து
நிலம்பார்த்துத் தன்னை ஊன்றித்
தங்கமகன் ஒளியாலும் கங்கையவள்
அருளாலும் செம்மை ஊறி
மங்களமாய் இலைவிரித்து மலர்ந்தாளாம்
ரப்பர்எனும் மங்கை; பேர்த்துத்
தங்கமுடி மணிவைத்தல் போல்நிரையில்
வைத்திட்டார் செல்வம் பெற்றார்!

சங்குநிறப் பால்பொழியும் தங்கமரச்
செல்வங்கள் சொட்ட ஈந்து
தங்கடமை முடித்துவிட்டுத் தனையழிக்கக்
கொடுத்துவிட்டுச் சாய்தல் போலச்
செங்குருதி நீராக்கிச் செம்புடலை
உரமாக்கிச் சாய்ந்து போக
அங்கிருந்து வந்தானோ? அவனுக்கும்
ரப்பருக்கும் மாற்றம் காணேண்!

***(சமூகக் கலைமணி சா.ஆ. அன்பானந்தன்)***

(i) இக்கவிதையில் காணப்படும் **அணி நயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) இக்கவிதை வழி நீ பெற்ற **தாக்கம்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

**பிரிவு இரண்டு : நாடகம்**

12. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் **கம்பரின் பாத்திரப்படைப்பை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

13. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் காணப்படும் **வாழ்வியல் சிந்தனைகளை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**பிரிவு மூன்று : நாவல்**

14. (i) அகல்விளக்கு நாவலில் பாக்கிய அம்மையாரின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) அகல்விளக்கு நாவலின் **கதைப்பின்னலை** விளக்குக. (10 புள்ளி)

அ) தொடக்கம்
ஆ) உச்சம்
இ) முடிவு

.

[20 புள்ளி]

**அல்லது**

15. (i) இமாவதியின் நட்பு சந்திரனின் வாழ்க்கையில் ஏற்படுத்திய **தாக்கத்தை** விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) அகல்விளக்கு நாவலின் **கதைப்பின்னல்** இரண்டனை விவரித்து எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

(எல்லா விடைகளும் பாடப் பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.)

## பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளில் உள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

ஆசானைத் தந்தையென வணங்க வேண்டும்
அவர்சொல்லும் அறிவுரைக்கும் இணங்க வேண்டும்
கூசாமல் தன்கருத்தைக் கூற வேண்டும்
குற்றமுண்டேல் ஒப்பிமனம் மாற வேண்டும்
மாசான வார்த்தையெதும் ஆசான் மாட்டு
மறந்தேனும் ஒருபோதும் பேசான் என்ற
**ஆசாரம் உள்ளவனே** நல்ல சீடன்
அறனறிந்த நல்வாழ்விற் கருக னாவான்

(நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை)

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது? (2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **ஓசைநயங்கள்** இரண்டனை எழுதுக (4 புள்ளி)

3. (i) **ஆசாரம் உள்ளவனே** என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

| |
|---|
| கூசாமல் தன்கருத்தைக் கூற வேண்டும்<br>குற்றமுண்டேல் ஒப்பிமனம் மாற வேண்டும் |

3. (ii) தவறுகள் சுட்டிக்காட்டப்பெறும் பொழுது மாணவர்கள் **என்ன செய்ய வேண்டும்**? (2 புள்ளி)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. கவிச்சக்கரவர்த்தி நாடக ஆசிரியரின் **பிற படைப்புகளுள்** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

5. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் **சோழனின் அமைச்சர் பெயரைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **உச்சம்** யாது? (2 புள்ளி)

6. கீழ்க்காணும் கூற்றை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| கம்பர் | : இது கேட்கத் தகாத வார்த்தை நான் என்ன பிழை செய்தேன்? |
| ஒட்டக்கூத்தர் | : நீர் பிழை செய்வதா? உம்மால் பிழை செய்யவே முடியாது! நீர் செய்வதையெல்லாம் தமிழுக்கு விதியாகவும் கதியாகவும் மாற்றுவதற்குக் கலைமகள் காத்திருக்கும் போது, உம்மால் பிழையும் செய்ய முடியுமா? உம்மை வெல்ல ஆயிரம் ஒட்டக்கூத்தர்கள் சேர்ந்தாலும் முடிகிற காரியமா? |
| கம்பர் | : கலைமகளின் திருவருளைப் பூரணமாகப் பெற்றவர்கள் தாங்கள்தான் என்பது தங்களுடைய ஒரு நூலைப் படித்தவனுக்குக்கூடத் தெரியுமே! |
| ஒட்டக்கூத்தர் | : கலைமகள் எனக்குத் திருவருள் செய்கிறாள்; உமக்கோ குற்றேவல் செய்கிறாள்! ஆயர் மங்கையாக உருவெடுத்து வந்து உம் கட்சிக்கு அவள் வெற்றி தேடித் தருகிறாள். நான் இனி உம்முடன் வாதிடுவதிலோ சக்கரவர்த்தியிடம் ஆஸ்தான கவியாக வீற்றிருப்பதிலோ அர்த்தமே இல்லை. |

*(அங்கம் 1, காட்சி 11, பக்கம் 83)*
*(பாரி நிலையம், பதிப்பு 2015)*

(i) இச்சூழலில் வெளிப்படும் ஒட்டக்கூத்தரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **மொழிநடையை** எழுதுக. (2 புள்ளி)

(iii) **குற்றேவல்** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாவல்

7. அகல்விளக்கு நாவல் ஆசிரியரின் **இயற்பெயரைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

8. (i) கல்லூரியில் **கழிவறை சிக்கலில் சம்பந்தப்பட்ட** இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) அகல்விளக்கு நாவலின் **துணைக்கருப்பொருள்களுள்** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

9. கீழ்க்காணும் கூற்றை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> "மூடநம்பிக்கையோ அல்லவோ, அது எப்படியோ போகட்டும். நாம் உழைக்க வேண்டும்; உழைப்புக்கு ஏற்ற கூலி வரவேண்டும். இப்படி எதிர் பார்ப்பதுதான் கடமை. அதைவிட்டு, எதிர்பாராமல் பணம் வந்து குவிய வேண்டும் என்று ஏங்குவதே பாவம்! பலருடைய பணம் தகாத வழியில் நமக்கு வந்து சேர்வது நல்லதா? அது தன்னலம் அல்லவா?"என்றேன்.
>
> "தன்னலம் இல்லாமல் இந்த உலகத்தில் யாரும் வாழ முடியாது" என்றான்.
>
> "உண்மைதான் மற்றவர்களைக் கெடுத்துத் தான் வாழவேண்டும் என்பதுதான் கெட்ட தன்னலம். மற்றவர்களும் வாழத் தானும் வாழவேண்டும் என்பது நல்ல தன்னலம். தனக்கு மட்டும் நல்ல காலம் வரவேண்டும் என்பது கெட்டது. நாட்டுக்கே நல்ல காலம் வந்தால், தனக்கும் நல்ல காலம் வரும் என்பது நல்லது. அதனால் மூடநம்பிக்கைகளை நான் வெறுக்கிறேன். அவைகளை அறிவுக்கும் பொருந்தவில்லை; தன்னலத்தையும் வளர்க்கின்றன."
>
> மாலன் பேசாமல் இருந்தான். மறுபடியும். குறிப்புப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தபடி இருந்து எழுந்து சென்றான்.
>
> சந்திரன் ஒரு வகையில் கெட்டான். மாலன் மற்றொரு வகையில் **குறுக்கு வழிகள்** நாடித் தவறான பாதையில் போவதால் கெடுவானோ என்று அவனைப் பற்றியும் கவலைப்பட்டேன்.
>
> *(அத்தியாயம் 16, பக்கம் 215-216)*
> *(பாரி நிலையம், பதிப்பு 2015)*

(i) இச்சூழலில் வெளிப்படும் வேலய்யனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணியை** எழுதுக. (2 புள்ளி)

(iii) **குறுக்கு வழிகள்** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பாகம் - இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை

### வாழ்ந்து காட்டுவோம்

தொழில்பலவாய்ப் பெருகிவரும் இந்த நாளிலே – நாம்
தொடங்கிவிட்டால் உயர்வுவரும் நமது வாழ்விலே
விழிதிறந்து வெளியில்வந்து விடியல் காணடா – தம்பி
வேறுபட்டுப் பிரிந்துநின்றால் எல்லாம் வீணடா!

காடுவெட்டி நிலந்திருத்திக் கண்ட பெருமையை – நீ
காலமெலாம் பேசிப்பேசி யாது கண்டனை?
நாடுசெல்லும் புதுவழியில் நடந்து பாரடா – தம்பி
நாளையுன்றன் கையிலென்றே உறுதி பூணடா!

மூன்றினங்கள் வாழ்ந்தபோதும் ஆட்சி ஒன்றுதான் – இங்கு
முன்னுயரும் வழியெவர்க்கும் பொதுவில் ஒன்றுதான்
சான்றெனவே மற்றவினம் வளம் பெருக்குது – தம்பி
சாணுயர்ந்தால் நம்மினம்ஏன் முழம் சறுக்குது?

பகுத்தறிவு வளர்ச்சியில்நாம் பழையவர் தானே –உயர்
பண்பாடு நெறியிலெல்லாம் சிறந்தவர் தானே
வகுத்துவைத்த குறள்நெறியை மறந்தத னாலே – தம்பி
வாழ்ந்து கெட்டோம் மறுபடிவா வாழ்ந்து காட்டுவோம்!

*(கவிச்சிட்டு கோவி. மணிதாசன்)*

10 மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**பத்திரிகை**

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே!

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்.

வானிடை நிகழும் கோடி
மாயங்கள், மாநி லத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
உட்புறம் வெளிப் புறத்தே
ஆனநற் கொள்கை, அன்பின்
அற்புதம் இயற்கைக் கூத்து
தேனிதழ் தன்னிற் சேர்த்துத்
தித்திக்கத் தருவாய் நித்தம்!

சிறுகதை ஒன்று சொல்லிப்
பெருமதி யூட்டும் தாளே!
அறைதனில் நடந்த வற்றை
அம்பலத் திழுத்துப் போட்டுக்
கறையுளம் தூய்மை செய்வாய்!
களைப்பிலே ஊக்கம் பெய்வாய்!
நிறைபொருள் ஆவாய் ஏழை
நீட்டிய வெறுங் கரத்தே!

சிறுகதை ஒன்று சொல்லிப்
பெருமதி யூட்டும் தாளே!
அறைதனில் நடந்த வற்றை
அம்பலத் திழுத்துப் போட்டுக்
கறையுளம் தூய்மை செய்வாய்!
களைப்பிலே ஊக்கம் பெய்வாய்!
நிறைபொருள் ஆவாய் ஏழை
நீட்டிய வெறுங் கரத்தே!

**(புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்)**

(i) இக்கவிதையில் காணப்படும் **நயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) (ii) இக்கவிதை வழி பத்திரிகையின் **பயன்கள்** மூன்றனை எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

**பிரிவு இரண்டு : நாடகம்**

12. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் ஒட்டக்கூத்தரின் **பண்புநலன்களை** விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **இடப்பின்னணி** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

**அல்லது**

13. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் குலோத்துங்க சோழனின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **மொழிநடை** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

**பிரிவு மூன்று : நாவல்**

14. அகல்விளக்கு நாவலில் சந்திரனின் **பாத்திரப்படைப்பை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

15. அகல்விளக்கு நாவலில் கதைப்பாத்திரங்கள் எதிர்நோக்கிய **வாழ்க்கைச் சிக்கல்களை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

(எல்லா விடைகளும் பாடப் பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.)

**பாகம் - ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளில் உள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

அறிஞர்தம் **இதய ஓடை**
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்

(புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்)

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது? (2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **அணிநயங்கள்** இரண்டனை எழுதுக (4 புள்ளி)

3. (i) **இதய ஓடை** என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்

(ii) பத்திரிகை வாசிக்காதவர்களின் நிலை என்ன? (2 புள்ளி)

[10 புள்ளி]

**பிரிவு இரண்டு : நாடகம்**

4. கவிச்சக்கரவர்த்தி நாடக ஆசிரியரின் **அடையைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

5. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் **அரசவைப் புலவர்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **உத்திமுறை** யாது? (2 புள்ளி)

6. கீழ்க்காணும் கூற்றை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| சடையப்ப வள்ளல் | : அரசியாருக்கும் தாங்கள் கவிஞர் என்பது தெரியுமா? என்மகிழ்ச்சி. என் மனத்தின் வரம்புக்குள் அடங்கவில்லை. கம்பரே, தங்கள் தந்தையாருக்குத் தங்களைப் பற்றிய செய்திகளை அவ்வப்போது நான் சொல்லியனுப்புவேன். அப்பொழுதெல்லாம் நான் கொள்ளும் பெருமகிழ்ச்சிக்கும் கர்வத்துக்கும் எல்லையே இராது. |
| கம்பர் | : நாளையே காவியத்தைத் தொடங்குவோம். ராமபிரானின் சரிதையைக் கூறும் காவியத்தை ராமன் முன்னிலையில் தான் பாட வேண்டும் என்பது அவனது திருவுள்ளம் போலும்!<br>[வள்ளல் திகைக்கிறார்]<br>தங்களுக்குச் சரராமன் என்றும் ஒரு பெயர் உண்டு அல்லவா? |
| சடையப்ப வள்லல் | : இது நான் செய்த தவம்; என் முனோர்கள் செய்த தவம்; நான் பிறந்த குலம்வம்ச பரம்பரையாகச் செய்த தவத்தின் பலன்! என் காலத்தில் என் முன்பாக எனது குடிசையில் **இந்தப் புண்ணிய சரிதம்** மகாகாவியமாகப் போகிறது. |
| கம்பர் | : [மகேஸ்வரியைப் பார்த்து வணங்கி] என் காவியம் இனிது நிறைவேற என் அன்னை ஆசீர்வதிக்க வேண்டும். |

*(அங்கம் 1, காட்சி 13, பக்கம் 98-99)*
*(பாரி நிலையம், பதிப்பு 2015)*

(i) இச்சூழலில் வெளிப்படும் சடையப்ப வள்ளலின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **சமுதாயப் பின்னணியை** எழுதுக. (2 புள்ளி)

(iii) **இந்தப் புண்ணிய சரிதம்** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

**பிரிவு இரண்டு : நாவல்**

7. அகல்விளக்கு நாவல் ஆசிரியர் பெற்ற **விருதினைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

8. (i) அகல்விளக்கு நாவலில் **சந்திரன் மனைவியின்** பெயரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) அகல்விளக்கு நாவலின் **பெண் துணைக்கதைமாந்தர்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

9. கீழ்க்காணும் கூற்றை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

"அண்ணன் சந்திரன்?"

"அவர் வீட்டிலேயே சரியாகத் தங்குவதில்லையாம் மனம்போனபடி வாழ்கிறாராம்."

"அய்யோ குடும்பமே! இந்த நிலைமைக்கா வர வேண்டும்?"

"இவள் என்ன செய்வாள்? நல்லவள்; சூது வாது அறியாதவள்."

அப்போது அம்மா வந்து, " போனது போகட்டும் அப்பா. இப்படி நடப்பது உண்டுதான். நீ போய் அவளுடைய வீட்டுக்காரரைப் பார்த்துத் தக்கபடி சொல்லி அழைத்து வா. எப்படியாவது கணவனும் மனைவியுமாக வாழும்படியாகச் செய். கர்ப்பமாக இருக்கிற பெண் அடிக்கடி கண்ணீர் விட்டுக் கலங்குவது நல்லது அல்ல. கற்பகத்தின் அப்பாவுக்கும் தீராத கவலையாகிவிட்டது. **மகனால் ஒரு பங்கும்**, மருமகனால் ஒரு பங்கும். அப்பனும் மகளுமாய் வீடு வாசல் நிலபுலம் எல்லாவற்றையும் மறந்து இங்கே வந்து கலங்கி நிற்கிறார்கள்" என்றார்.

சோழசிங்கபுரம் போய் மாலனைக் கண்டு பேசி முடிந்ததைச் செய்ய வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டேன். "அப்படியே செய்கிறேன் அம்மா" என்றேன். அதற்குள் முழுச்செய்திகளும் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

*(அத்தியாயம் 24, பக்கம் 337-338)*
*(பாரி நிலையம், பதிப்பு 2015)*

(i) இச்சூழலில் வெளிப்படும் வேலய்யன் அம்மாவின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **மொழிநடையை** எழுதுக. (2 புள்ளி)

(iii) **மகனால் ஒரு பங்கும்** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பாகம் - இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை

**கல்வி**

காணும் காட்சியின் கருத்துமணி துலங்க
கேட்கும் மொழிகளில் கிடக்கும் நுட்பம்
புரிந்து மனத்துள் புதுவளம் பூக்க
முன்னை முன்னை முன்னைய நாள்களில்
விளைந்தவை கண்முன் வியனுற நடமிட
வாழும் கால வழக்குகள் தெளிய
நாளும் நமைப்பண் படுத்தும் செல்வம்
கல்வி கல்வி கல்விச் சுடரே!
கல்லார்க் கெல்லாக் காட்சியும் இருளே
இசைபெறு மொழியெலாம் ஏதோ உளறலே
மொழியையும் கலைபண் பாட்டையும் கண்டு
போலச் செய்தல் புறநிலை நடிப்பே!
அதனா லன்றோ ஆன்றோர் வள்ளுவர்
“கல்லார் விலங்கினோ டொப்ப”ரென் றோதினார்
நாகரி கத்தில் நல்லற மொழிகளில்
கனிந்து விளையக் கவின்மிகு பாதை
காட்டி நினைவில் கருத்தூற்றுப் பெருக
அறிவுத் தெளிவினை அளிப்பது கல்வி!
தனிமாந் தத்திரு தழைத்துமே லோங்க
இனநலப் பண்ணிசை எங்கும் ஒலிசெய
பிறர்மதித் தேத்தும் பேறுவந் தமையக்
கைகொடுத் தருள்வது கல்விச் செல்வமே!
பாடம் செய்ததைப் பரப்பிப் பெற்றிடும்
சான்றிதழ் சாண்முழ வயிற்றுக் குதவிடும்
வாழ்வின் அடைவு வாசலது தானோ?
அறவழி பயிலா அகத்தினைப் பெறினும்
பெறாத நிலையே; பேருல கினிலே
ஊனரே அன்னார்! உலகில் கல்வியை
எந்த மொழியும் ஈயும் எனினும்,
தன்னைத் தன்னினப் பின்னணி யெல்லாம்
உணர்த்தி உலகில் உயரச் செய்வது
தாய்மொழிக் கல்வியே; தக்கார் கூற்றிது
தன்னை அறியான் தகவெலாம் பெறினும்
குறையுடை யோனே கோதறச் செய்யத்
தாய்மொழிக் கல்வியே தன்னுயிர்க்கு
நிகரெனக் கொள்ளலே நிறையுடைத் தாமே!

(கவிஞர் முரசு நெடுமாறன்)

10 மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**நான் ஒரு பித்தன்**

பொய் மலிந்து வஞ்சகத்தைப்
போய்த்தழுவும் மக்களிடை
மெய்யுரைக்க வந்தவன்நான்
மேதினியில் பித்தனடா!

நெஞ்சிலொன்று நேரிலொன்று
நிகழ்த்துகின்ற புவிமீது
வஞ்சமின்றி ஒன்றினையே
வலியுறுத்தும் பித்தனடா!

பண்பிழந்து பாவையரை
பதராக்கும் ஆணுலகில்
பெண்மையினைத் தெய்வமென்று
பேசவந்த பித்தனடா!

பொதுப்பணத்தைச் சூறையாடி
போய்ப்பதுக்கும் சூதரிலே
புதுமலர்ச்சி சொல்வதன்றி
போக்கிழந்த பித்தனடா!

கவிதைமணம் நுகராத
கழுகுகளின் மத்தியிலே
புவிசிறக்கப் பாட்டெழுதும்
புத்துலகப் பித்தனடா!

யார்பாட்டுக் கேட்டாலும்
எதிர்ப்பாட்டுப் பாடாமல்
ஊர்பாட்டைக் கெடுப்போரில்
ஒதுங்கிநிற்கும் பித்தனடா!

பதவிக்கே வாய்பிளக்கும்
பச்சோந்திக் கூட்டத்தில்
உதவிக்கே முன்நிற்கும்
ஒருபெரிய பித்தனடா!

அழுக்காறு கொண்டிலங்கும்
ஆமைகளின் கூட்டத்தில்
இழுக்காறு மாற்றுதற்கே
எண்ணிவந்த பித்தனடா!

தெள்ளுதமிழ் நீதியெலாம்
தேய்கின்ற கூட்டத்தில்
வள்ளுவனை வாழவைக்க
வந்தவன்நான் பித்தனடா!

**(கவிவாணர் ஐ.உலகநாதன்)**

(i) இக்கவிதையில் காணப்படும் **ஓசைநயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) (ii) இக்கவிதை வழி நீ பெற்ற **படிப்பினை** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

**பிரிவு இரண்டு : நாடகம்**

12. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் கம்பரின் **கவித்துவத்தையும் தனித்துவத்தையும்** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

13. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **துணைக்கருப்பொருள்களை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**பிரிவு மூன்று : நாவல்**

14. (i) அகல்விளக்கு நாவலில் சாந்தலிங்கத்தின் **பண்புநலன்களை** விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) அகல்விளக்கு நாவலின் **இடப்பின்னணி** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

**அல்லது**

15. (i) அகல்விளக்கு நாவலில் கயற்கண்ணியின் **பண்புநலன்களை** விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) அகல்விளக்கு நாவலின் **உத்திமுறை** மூன்றனை விவரித்து எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

(எல்லா விடைகளும் பாடப் பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.)

**பாகம் - ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளில் உள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

**காலங்கள் பயிற்றிடும் ஆக்கல்கள்** பார்த்துமே
  கருத்தினில் மாற்றங்கள் செய்வதுவா? – பல்கிய
கோலங்கள் போலும்வீண் கொள்கையென் பிடியினில்
  குறுகியே மேலும்நாம் உய்வதுவா?

நாலடி முன்செல்ல ஏழடி பின்தள்ளும்
  நடையியல் பயிர்ப்பது உலகடியா? – இல்லை
காலடிச் சுவடிகள் காட்டிடும் கணக்கதில்
  கலங்குதல் தான்என்றும் நிலையடியா?

*(தமிழ்மணி எல்லோன்)*

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது? (2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **ஓசைநயங்கள்** இரண்டனை எழுதுக (4 புள்ளி)

3. (i) **காலங்கள் பயிற்றிடும் ஆக்கல்கள்** என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

| |
|---|
| நாலடி முன்செல்ல ஏழடி பின்தள்ளும்<br>  நடையியல் பயிர்ப்பது உலகடியா? – இல்லை<br>காலடிச் சுவடிகள் காட்டிடும் கணக்கதில்<br>  கலங்குதல் தான்என்றும் நிலையடியா? |

(ii) வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை எவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டும்? (2 புள்ளி)

[10 புள்ளி]

**பிரிவு இரண்டு : நாடகம்**

4. கவிச்சக்கரவர்த்தி நாடக ஆசிரியர் **தமிழாக்கம்** செய்த நூல் ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

5. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் **கம்பர் உயிர்துறந்த இடத்தைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **படிப்பினை** ஒன்றனை எழுதுக. (2 புள்ளி)

6. கீழ்க்காணும் கூற்றை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

கம்பர் : இவ்வளவு நேரமும் படித்துக் கொண்டா இருந்தீர்கள்? என்ன புத்தகம்?

சிங்கன் : கம்ப ராமாயணம்

கம்பர் : [சிரித்து] அப்படியா? நன்றாக இருக்கிறதா?

சிங்கன் : ஐயா, நான் கல்வியறிவில்லாதவன். ஏதோ எனக்குத் தெரிந்தவரையில் நானாகப் படித்து மகிழ்ந்து கொள்ளுவேன். ஒவ்வொரு பாட்டும் என்னையே **பரவசப்படுத்துகிறது.** கல்விமான்கள் படித்தால், எப்படியெல்லாம் ஆனந்தம் அடைவார்களோ? தாங்களும் கம்பராமாயணத்தைப் பற்றி கேள்விப் பட்டிருப்பீர்களே?

கம்பர் : ஐயா, தங்களுக்குத் தொழில் நன்றாக நடக்கிறதா?

சிங்கன் : கம்பர் கிருபையில் தொழில் நன்றாகவே நடந்து வருகிறது. நானும் என் குடும்பமும் சௌக்கியமாகவே இருக்கிறோம்.

*(அங்கம் 3, காட்சி 1, பக்கம் 200)*
*(பாரி நிலையம், பதிப்பு 2015)*

(i) இச்சூழலில் வெளிப்படும் சிங்கனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணியை** எழுதுக. (2 புள்ளி)

(iii) **பரவசப்படுத்துகிறது** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாவல்

7. அகல்விளக்கு நாவல் ஆசிரியரின் **கொள்கையைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

8. (i) அகல்விளக்கு நாவலில் சந்திரன் **மறைந்து வாழ்ந்த** இடத்தைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) அகல்விளக்கு நாவலின் **உத்திமுறை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

9. கீழ்க்காணும் கூற்றை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> ஒரு நாள் அவள் உணவு பரிமாற வந்தபோது, அவளுடைய கால்களைப் பார்த்தபடியே இருந்தேன்.
>
> “என்ன, சினிமா நட்சத்திரங்களில் நினைப்பா?” என்றாள்.
>
> “ஆ ஆ! அந்த படத்தில் பார்த்த நடிகை உன்னைப்போல் நடந்து வரும்போது ஆ ஆ!என்ன அழகு என்ன ஒய்யாரம்! அந்தக் கால்களையே பார்த்துக் கொண்டிருக்கலாம் போல் இருந்தது. ஒரு ரோசாப்பூவை ஒய்யாரமாகப் பறித்து அவள் தன் தலையில் சூட்டிக்கொண்டபோது அந்தக் கையை எடுத்ததே ஒரு கலை! அந்த விரல்களில் வளைவு நெளிவு அடடா! பூவைத் தலையில் சூடிக்கொண்டே அவள் திரும்பிப் பார்த்த பார்வை! அட்டா! உயிரே கொள்ளை போகிறாற்போல் இருந்தது!” என்றேன்.
>
> “அய்யய்யோ! வரவர ஆபத்தாக வந்து முடியும்போல் இருக்கிறதே! உங்களுக்கு நடிகைப் பைத்தியமே பிடித்திவிடும் போல் இருக்கிறதே! என்ன **இப்படிக் கெட்டுவிட்டீர்களே!** இனிமேல் தயவுசெய்து சினிமாவுக்கே போக வேண்டா. நானும் போகப் போவதில்லை. அடிக்கடி சினிமா பார்த்தால் குடும்ப ஆண்கள் கெட்டுப் போவார்கள்போல் இருக்கிறதே” என்றாள்.
> அவள் இதைச் சொல்வாளா என்றுதான் காத்திருந்தேன்.
>
> *(அத்தியாயம் 23, பக்கம் 321)*
> *(பாரி நிலையம், பதிப்பு 2015)*

(i) இச்சூழலில் வெளிப்படும் கயற்கண்ணியின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணியை** எழுதுக. (2 புள்ளி)

(iii) **இப்படிக் கெட்டுவிட்டீர்களே!** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பாகம் - இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை

**விண்மீன்**

சின்னச் சின்ன அகல்விளக்கு – கண்
சிமிட்டி அழைக்கும் பொன்விளக்கு
எண்ணில் அடங்காப் பலகோடி! – அவை
எண்ணெய் இல்லா மின்விளக்கு!

திரியும் கலமும் இல்லாமல்- சுடர்
எரியும் விந்தைத் திருவிளக்கு!
முறையாய் அவற்றில் ஒளியேற்றும் – பணி
புரியும் கதிரும் பெருவிளக்கு!

வானக் குளத்தின் மீன்களெனப் – பெயர்
வைத்தார் முன்னோர் அழகாக!
வானத் திரையின் பொத்தலெனச் – சிலர்
வரைந்தார் அறியாத் தனமாக!

அள்ளி முடித்த கூந்தலினை – மதி
அழகி அவிழ்த்தாள்! விரிந்திடவே!
புல்லிக் கிடந்த அரும்புமலர் – உடன்
பொலபொல வென்றே இறைந்தனவே!

கோலம் போடப் புள்ளிவைத்தாள் – ஒரு
கோதை வான முற்றத்தில்!
ஆளன் அன்பாய் அழைத்திடவே – அவள்
அக்கணம் விட்டாள் திட்டத்தினை

விண்ணை ஆளும் பேரரசன் – ஒளிர்
பொன்னைக் குவித்துப் புரந்தனனே!
என்ன நினைத்தோ ஒருநாளில் – அவன்
எட்டி உதைத்தான் இறைந்திடவே!

நிலவுப் பெண்ணின் பிறந்தவிழா! – உயர்
நீள்வா னெங்கும் கொண்டாட்டம்!
குழைகள் அணிந்த பெண்களெல்லாம் – அவண்
கும்மி அடிக்கும் மின்னோட்டம்!

**(வண்ணக் கவிஞர் கரு.திருவரசு)**

10 மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**தாய்**

வித்தாய் மடியில் வைத்தாய்; மாதம்
பத்தாய்ச் சுமந்தெனைப் பெற்றெடுத்தாய்!
முத்தாய் முல்லைக் கொத்தாய்க் கொஞ்சி
மொத்தாய்; நல்ல பேர்க்கொடுத்தாய்!
சத்தாய் உணவைச் சமைத்தாய்; பிள்ளை
சமர்த்தாய் உண்ணச் செய்வித்தாய்!
பித்தாய்க் கிடந்து பெரிதாய் அன்பைப்
பெய்தாய்; நீதான் தெய்வத் தாய்!

குழந்தாய்! என்றே அழைத்தாய்; உள்ளங்
குளிர்ந்தாய்; எனைநீ அரவணைத் தாய்!
குழைந்தாய்; பாசம் பொழிந்தாய், தேனில்
குழைத்தாய் சொல்லை நீ மொழிந்தாய்!
விளைந்தாய் மலராய் விரிந்தாய் மணமாய்
விடிந்தாய் எந்தன் பகற் பொழுதாய்!
வழிந்தாய் புனலாய் வளர்த்தாய் பயிரை
வாழ்ந்தாய் எனக்கென நாள்முழு தாய்!

நனைந்தாய் மழையில் காய்ந்தாய் வெயிலில்
நடந்தாய்; குடும்பத் தேரிழுத் தாய்!
முனைந்தாய் பணியில் சலித்தாயில்லை;
துணிந்தாய் எதற்கும் தோள் கொடுத்தாய்!
தனதாய் எதையும் நினைத்தாயில்லை;
எனதாய் எண்ணி நீ சேமித்தாய்!
சினந்தாயில்லை செய்பிழை பொறுத்தாய்;
சிரித்தாய், நீதான் பூமித்தாய்!

மருந்தாய் நோயில் விருந்தாய்ப் பசியில்
இருந்தாய்; நீயெனை வாழ்வித்தாய்!
மறந்தாய் உன்னை; நினைந்தாய் என்னை
அருந்தாய்ப் பண்பை அறிவித் தாய்!
வருந்தாய் நாளும் மெலிந்தாய் மேனி
உழைத்தாய் இரவில் துயில் நீத்தாய்!
புரிந்தாய் வினைகள் முடித்தாய் கடனை;
படுத்தாய்; ஒருநாள் உயிர் நீத்தாய்!

மறைந்தாய் மண்ணில் மடிந்தாய் எனினும்
நிறைந்தாய் நெஞ்சில் நீ நிலைத்தாய்!
பிரிந்தாய் விண்ணில் பறந்தாய் எனினும்
படிந்தாய் கண்ணில் நீர்முத் தாய்!
இறந்தால் நானும் பிறந்தால் மீண்டும்

இடந்தா! உந்தன் மடி மேலே!
இருந்தால் உந்தன் மகனா யிருக்கும்
வரந்தான் வேண்டும் புவிமேலே!

**(வாலிபக்கவிஞர் வாலி)**

(i) இக்கவிதையில் காணப்படும் **அணி நயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) இக்கவிதை வழி நீ பெற்ற **தாக்கம்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

12. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் குணவீரப்பண்டிதரின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் கம்பரின் **நாடோடி வாழ்க்கை சம்பவங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

**அல்லது**

13. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் குலசேகரப் பாண்டியனின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

(ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **உத்திமுறைகள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

[20 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

14. அகல்விளக்கு நாவலில் பெண் கதைப்பாத்திரங்கள் மூலம் கிடைக்கப்பெறும் **படிப்பினைகளை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

15. வேலய்யன் இன்றைய **இளைஞர்களுக்கு வழிகாட்டி**. இக்கூற்றை விளக்கி எழுதுக. [20 புள்ளி]

## விடைப்பட்டி - பயிற்றி 1

| பாகம் 1 - பிரிவு 1 (கவிதை) | | |
|---|---|---|
| 1 | தன்னிலை விளக்கம் | (2 புள்ளி) |
| 2 | **ஓசைநயம்**<br><br>**எதுகை :**<br>அழுக்காறு – இழுக்காறு<br>தெள்ளுதமிழ் – வள்ளுவனை<br><br>**மோனை :**<br>அழுக்காறு – ஆமைகளின்<br>இழுக்காறு – எண்ணிவந்த<br>தெள்ளுதமிழ் – தேய்கின்ற<br>வள்ளுவனை – வந்தவன்நான்<br><br>**சந்தம் :**<br>அழுக்காறு – இழுக்காறு<br><br>**அணிநயம்**<br><br>**உருவக அணி :**<br>"எண்ணிவந்த பித்தனடா"<br>"ஆமைகளின் கூட்டத்தில்"<br><br>**திரிபு அணி :**<br>அழுக்காறு – இழுக்காறு<br><br>**பின்வருநிலை அணி :**<br>"எண்ணிவந்த பித்தனடா....<br>வந்தவன்நான் பித்தனடா"<br><br>**அங்கத முரண் அணி :**<br>"வள்ளுவனை வாழ்வைக்க<br>வந்தவன்நான் பித்தனடா"<br><br>**தன்மை நவிற்சி அணி :**<br>"தெள்ளுதமிழ் நீதியெல்லாம்<br>தேய்கின்ற கூட்டத்தில்"<br><br>**சொல்நயம்**<br>• ஆமைகளின் கூட்டத்தில்<br>• தேய்கின்ற கூட்டத்தில்<br>• வள்ளுவனை வாழவைக்க<br><br>**பொருள்நயம்**<br>சமூகத்தில் பல குறைபாடுகள் இருக்கிறன. சமூகத்தில் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்ட கவிஞர் தனது நேர்மறை செயல்பாட்டினைத் தாழ்த்தி மதிப்பிடுகிறார் கவிஞர். | (4 புள்ளி) |
| 3 | i) சீர்கேடுகளைக் களைய<br><br>ii) திருவள்ளுவர் வகுத்தளித்த வாழ்வியல் சிந்தனைகளைச் சமுதாயத்தில் நிலைபெறச் செய்ய முயற்சிக்கிறார் | (2 புள்ளி)<br><br>(2 புள்ளி) |

| பாகம் 1 - பிரிவு 2 (நாடகம்) | | |
|---|---|---|
| 4. | - தமிழ்நாடு அரசின் பரிசு<br>- சாகித்திய அகாதமி | (2 புள்ளி) |
| 5. (i) | - குலசேகர பாண்டியன்<br>- பராக்கிரமபாகு<br>- வேங்கி நாட்டு மன்னன்<br>- தெலுங்கு சோழர்கள்<br>- காகதீய மன்னன் | (2 புள்ளி) |
| 5. (ii) | **ஆள்வோர் சமுதாயம்**<br>- அரசர், அரசி<br>- அமைச்சர்<br>- காவலர்கள்<br>- அரண்மனை பணியளர்கள்<br>- அரசவைப் புலவர்கள்<br>- ஒற்றன்<br><br>**ஆளப்படுவோர் சமுதாயம்**<br>- குடிமக்கள்<br>- புலவர்கள்<br>- உழவர்கள் / வேளாளர்<br>- அந்தணர்<br>- நடனக் கலைஞர்கள் | (2 புள்ளி) |
| 6 (i) | - புகழை விரும்பதாவர் / புகழைத் தேடிப் போகாதவர்.<br>- அரண்மனை வாழ்க்கையில் ஈர்க்கப்படாதவர் / ஈடுபாடு காட்டாதவர்.<br>- உழவர்களின் மீது தனிமதிப்பும் மரியாதையும் உள்ளவர்<br>- தனக்குத் துணைநின்று காத்தவர்களை விட்டுப்போக எண்ணாதவர். | (2 புள்ளி) |
| 6 (ii) | - சடையப்பவள்ளலின் வீடு | (2 புள்ளி) |
| 6 (iii) | - குணவீரப் பண்டிதர் அழைத்த நோக்கத்தை அறிந்த கம்பர், தானே மன்னன் குலோத்துங்கச் சோழனிடம் சென்று அரசவையில் வாய்ப்பு வழங்குமாறு கேட்க விருப்பம் கொள்ளவில்லை. | (2 புள்ளி) |
| 6 (iv) | - கம்பர் ஏர் எழுபது நூலைச் சடையப்பவள்ளல் வீட்டில் அரங்கேற்றம் செய்கிறார்.<br>- கம்பரின் கவிப்புலமை அனைவராலும் பாராட்டப்படுகிறது.<br>- இதனால், கம்பரைச் சோழ மன்னனின் அவைக்கு அழைத்துச் செல்ல விரும்புவதாகக் குணவீரப் பண்டிதர் கூறுகிறார்.<br>- அதனைச் சிறிதும் விரும்பாத கம்பர், தன் பாட்டை விரும்பினால் சோழனே தன்னை நாடி சடைப்பவள்ளல் வீட்டிற்கு வரட்டும் என்று கூறுகிறார். | (3 புள்ளி) |

| பாகம் 1 - பிரிவு 3 (நாவல்) | | |
|---|---|---|
| 7 | - கல்வித்துறை<br>- அரசுத்துறை<br>- தமிழ் இலக்கியத்துறை | (2 புள்ளி) |
| 8 (i) | - மணிமேகலை | (2 புள்ளி) |
| 8 (ii) | - நட்பைப் போற்ற வேண்டும்<br>- கல்விச் செல்வத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்<br>- பெண்மையை மதித்துப் போற்ற வேண்டும்<br>- அறநூல்களை வாசிக்கும் பழக்கம் வேண்டும்<br>- வாழ்க்கைப் பயணத்தைத் தொடர தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்<br>- வாழ்க்கைப் போராட்டத்தைத் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும்<br>- மூட நம்பிக்கையை விட்டொழிக்க வேண்டும்<br>- ஆடம்பரமில்லாமல் எளிய வாழ்க்கை வாழ வேண்டும்<br>- உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி வாழ வேண்டும்<br>- வாழ்க்கையில் கொள்கை வகுத்து வாழ வேண்டும்<br>- குடும்ப உறுப்பினர்களிடம் அன்பு காட்ட வேண்டும்<br>- ஆண்பெண் இரு பாலரும் தூய்மையான எண்ணத்தோடு பழக வேண்டும்<br>- தொண்டு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்<br>- வாழ்க்கையில் பொறுமை, விட்டுக் கொடுத்தல்,சகிப்புத்தன்மை வேண்டும் | (2 புள்ளி) |
| 9 (i) | - பிறர் நலத்தில் அக்கறையுள்ளவர்.<br>- கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்.<br>- எந்த முடிவையும் பொறுமையாக எடுக்க வேண்டும் என எண்ணம் உள்ளவர். | (2 புள்ளி) |
| 9 (ii) | - உரையாடல் உத்தி | (2 புள்ளி) |
| 9 (iii) | - கல்வியில் சிறந்து விளங்கும் சந்திரனை மேற்கல்வியைத் தொடர அவனுடைய தந்தை மறுக்கிறார். | (2 புள்ளி) |
| 9 (iv) | - நகரத்துப் பழக்கத்தால் தன் தம்பி கெட்டுச் சீரழிந்து போனதால் சந்திரனை எட்டாம் வகுப்போடு நிறுத்திட அவனுடைய தந்தை சாமண்ணா எண்ணம் கொண்டார்.<br>- சந்திரனின் திறமையை நேரிலே சோதித்து வியந்த கல்வி அதிகாரி (இன்ஸ்பெக்டர்), அவனுடைய மேற்படிப்பைப் பற்றி தலைமையாசிரியரிடம் கேட்கிறார்<br>- தலைமையாசிரியர் மூலம் சாமண்ணாவின் மனநிலையை அறிந்த இன்ஸ்பெக்டர் மீண்டும் வியந்து சந்திரனை மேற்படிப்புப் படிக்க வைக்க சாமாண்ணாவிடம் பேச முடிவெடுக்கிறார். | (3 புள்ளி) |

<table>
<tr><th colspan="3">பாகம் 2 - பிரிவு 1 (கவிதை)</th></tr>
<tr><td>10</td><td>முன்னுரை<br>- கவிஞர் – நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை<br>- தலைப்பு – மாணவர்க்கு<br>- பாடுபொருள் – மாணவர்க்கு<br>- மையக்கரு – நன்மாணாக்கரின் இயல்புகள்<br><br>கண்ணி 1<br>- ஆசிரியரை நமது தந்தைக்கு நிகராகப் போற்ற வேண்டும்.<br>- ஆசிரியர் கூறும் அறிவுரைகளுக்குச் செவிசாய்க்க வேண்டும்.<br>- தங்கள் கருத்துகளை ஆசிரியரிடத்தில் தயங்காமல் கூற வேண்டும்.<br>- தவறு என ஆசிரியர் சுட்டிக்காட்டும் பொழுது அதனை மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்.<br>- குற்றமான சொற்களை ஒருபொழுதும் ஆசிரியரிடத்தில் கூறக்கூடாது.<br>- இத்தகைய நெறிகளைக் கடைப்பிடிப்பவனே நல்வாழ்வு வாழத் தகுதியுடையவனாகக் கருதப்படுவான்.<br><br>கண்ணி 2<br>- ஆசிரியரிடத்தில் மரியாதை இல்லாத காரணத்தினால் இன்று பள்ளிகளில் குற்றச் செயல்கள் தலைத்தூக்கியுள்ளன.<br>- கல்வி கற்றுத்தரும் ஆசிரியரைத் தாக்கிப் பேசுவதோடு தனக்கென உரிமை உள்ளது என்ற நினைப்பில் மாணவர்கள் செயல்படுவது தவறு.<br>- மாணவர்கள் கல்வி கற்பதில் முழு கவனத்தைச் செலுத்தாமல் ஆசிரியரை எதிர்த்து உரிமைக்குரல் எழுப்ப முயலுகின்றனர்.<br>- இதன் காரணமாகப் பள்ளிகள் சிறப்பான கல்விச் சேவையை வழங்குவதில் தடை ஏற்படுகின்றது.<br><br>கண்ணி 3<br>- மாணவர்கள் சுய ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்<br>- இவ்வுலகில் மேன்மை நிலையை அடைந்த உயர்ந்தோர்கள் பலரும் ஒழுக்க நெறியோடு வாழ்ந்தவர்களே ஆவர்<br>- நல்லொழுக்கத்தை உறுதியாகக் கடைப்பிடித்து வாழ்பவர்களுக்குத் துன்பம் தற்காலிகமே; அவர்களின் வாழ்வில் இன்பம் நிலைத்து நிற்கும்.<br>- இதனை மாணவர்கள் நன்குணர்ந்து ஒழுக்கத்தை உயிருக்கு நிகராகப் போற்றி வாழ வேண்டும்.<br><br>கண்ணி 4<br>- பெற்றோர்கள் வறுமையான நிலையில் வாழ்ந்தாலும் தங்களது பிள்ளைகள் கல்வியில் சிறப்பான நிலையை அடைய வேண்டும் என்ற ஆசையால் தன்னலம் கருதாமல் அரும்பாடுபட்டு உழைக்கின்றனர்.<br>- கல்வித் தேவைக்காகப் பெற்றோர் அனுப்பும் பணத்தைப் பிள்ளைகள் நகர ஆடம்பர வாழ்க்கையில் சீரழிக்கக் கூடாது.<br>- மாணவர்கள் தங்கள் மனத்தைக் கட்டுப்படுத்தி கல்வியிலேயே முழு கவனத்தைச் செலுத்த வேண்டுவது அவசியம்.<br><br>முடிவுரை<br>- ஏற்புடைய முடிவுரை</td><td>2 புள்ளி<br><br>கருத்து<br>5x3=15<br><br>முடிவு<br>(2 புள்ளி)<br><br>மொழி<br>(1 புள்ளி)</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 11(i) | **உருவக அணி**<br>- "தங்கமகன் ஒளியாலும்"<br>(சூரியன் தங்கமகனாக உருவகம்)<br><br>- "கங்கையவள் அருளாலும்"<br>(நீர் கங்கையாக உருவகம்)<br><br>- "ரப்பர்எனும் மங்கை"<br>(ரப்பர் மங்கையாக உருவகம்)<br><br>- "தங்கமரச் செல்வங்கள் சொட்ட ஈந்து"<br>(ரப்பர் மரம் தங்க மரமாக உருவகம்)<br><br>- "செங்குருதி நீராக்கி"<br>(இரத்ததை வியர்வையாகவும்)<br><br>- "செம்புடலை உரமாக்கி"<br>(உடலை உரமாகவும்)<br><br>**உவமை அணி**<br>- "எங்கிருந்தோ தமிழனைப்போ லிங்கெழுந்து"<br>(<br>- "தங்கமுடி மணிவைத்தல் போல்நிரையில்"<br>(தங்கத்திலான முடியில்/ கிரீடத்தில் மணிகளை அடுக்குவது போன்று)<br><br>- "சங்குநிறப் பால் பொழியும்"<br>(சங்கைப் போன்று வெள்ளை நிறத்திலான பால்)<br><br>- "தங்கடமை முடித்துவிட்டுத்..... சாய்தல் போல"<br>(ரப்பர் பாலைக் கொடுத்து முடித்து மண்ணில் சாய்தல் போல)<br><br>• ஏதாவது மூன்று கருத்துகள் எழுதினால் போதும் | கருத்து<br>3x3=9<br><br>மொழி<br>1 புள்ளி |
| 11(ii) | **தாக்கம் 1**<br>- என் முன்னோர்கள் உழைக்கச் சளைக்காதவர்கள் என்று அறிகையில் எனக்குள் பெருமை மேலிடுகிறது<br><br>**தாக்கம் 2**<br>- உழைத்தும் முன்னேற முடியாத நம் தமிழினத்தை எண்ணுகையில் எனக்குள் வருத்தம் உண்டாகிறது<br><br>**தாக்கம் 3**<br>- இனப்பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்கின்ற உத்வேக உணர்வு என்னுள் எழும்பியுள்ளது.<br><br>• ஏற்புடைய பிற விடைகள் | கருத்து<br>3x3=9<br><br>மொழி<br>1 புள்ளி |

| பாகம் 2 - பிரிவு 2 (நாடகம்) | | |
|---|---|---|
| 12 | முன்னுரை<br>- பல்வேறு தரமான இலக்கியங்களைப் படைத்தவர், கு.அழகிரிசாமி<br>- அவர் கற்பனையில் மலர்ந்தது, கவிச்சக்கரவர்த்தி நாடகம்<br>- கருப்பொருள், கம்பரின் தனித்துவமும் கவித்துவமும்<br><br>**கருத்து 1**<br>உழவர்களைப் போற்றுபவர்<br><br>**சான்று:**<br>- உழவர்களையும் உழவுத் தொழிலையும் போற்றி ஏர் எழுபது நூலை எழுதி சடையப்ப வல்லலின் வீட்டில் அரங்கேற்றம் செய்கிறார்.<br><br>**நோக்கம்:**<br>- மக்களை வாழ்விக்கும் உழவர்களையும் உழவுத்தொழிலையும் போற்ற வேண்டும்<br><br>**கருத்து 2**<br>பதவி ஆசை இல்லாதவர்<br><br>**சான்று:**<br>- கம்பரின் கவியாற்றலில் கவரப்பட்ட குலோத்துங்கன் கம்பரைத் தனது ஆஸ்தான கவியாக இருக்கும்படி வேண்டுகிறான். அதை மறுக்கிறார் கம்பர்.<br><br>**நோக்கம்:**<br>- பதவிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கடமைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.<br><br>**கருத்து 3**<br>துணிவு மனப்பான்மை கொண்டவர்<br><br>**சான்று:**<br>- அரசவையில் நாட்டியமாடிய பெண்ணின் நடனத்தைப் பாராட்டி காற்சிலம்பைப் பரிசாகக் கொடுக்கிறார்.<br>- ஒட்டக்கூத்தர் அதனை இடித்துரைக்கிறார். கலையைப் போற்றும் உரிமை சோழ சக்கரவர்த்திக்கு மட்டும் இல்லாமல் அனைவருக்கும் உள்ளதாக மன்னர் முன்னிலையில் கூறுகிறார்.<br><br>**நோக்கம்:**<br>- நியாயத்திற்குக் குரல் கொடுக்க வேண்டும்.<br><br>**கருத்து 4**<br>செய்நன்றி மறவாதவர்<br><br>**சான்று:**<br>- கம்பர் சடையப்ப வல்லலின் ஆதரவினால் கல்விக் கற்றுப் பெரும் புலவராகினார். சோழனின் அரண்மனைக்குச் சென்று அரசவைப் புலவராக நியமனம் பெற்றும் தன்னை உருவாக்கிய சடையப்பவள்ளலை ஒரு போதும் மறக்கவில்லை.<br>- அடிக்கடி திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்று காண்கிறார்.<br>- தான் இயற்றிய இராமயணத்தில் சடையப்பரைக் குறிப்பிடுகிறார்.<br><br>**நோக்கம்:**<br>- வாழ்க்கையில் நம்மை உயர்த்திவிட்டவரை ஒருபோதும் மறக்கக் கூடாது. | 2 புள்ளி<br><br>கருத்து<br>5x3=15<br><br>மொழி 1 |

| | | |
|---|---|---|
| | **கருத்து 5**<br>மரபுமீறிய புலவர்<br><br>**சான்று:**<br>- கவிபாடும் மரபு, அரசவை மரபு, போர் மரபு போன்றவற்றை மீறி தமக்கு நியாயமாகப் பட்டதைச் செய்யத் துணிகிறார் கம்பர்<br><br>**நோக்கம்:**<br>- காலத்திற்கு ஒவ்வாத மரபுகளைப் பின்பற்றுவதை விடுத்துப் பகுத்தறிவு சிந்தனையோடு செயல்பட வேண்டும்.<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)*<br><br>**முடிவுரை**<br>- ஏற்புடைய விடிவுரை<br><br>• **ஏதாவது ஐந்து கருத்துகள் எழுதினால் போதும்** | முடிவு<br>(2 புள்ளி) |
| 13 | **முன்னுரை :**<br>ஆசிரியர் – கு.அழகிரிசாமி<br>நாடகம் – கவிச்சக்கரவர்த்தி<br>கருப்பொருள் – கம்பரின் கவித்துவமும் தனித்துவமும்<br><br>**கருத்து :**<br>• செய்ந்நன்றி மறவாமை வேண்டும் (கம்பர்)<br>• நாமே புகழைத் தேடிப் போகக் கூடாது (கம்பர்)<br>• சான்றோரைப் போற்ற வேண்டும் (குலோத்துங்க சோழன்)<br>• தோல்வியை ஏற்கும் மனநிலை வேண்டும் (ஒட்டக்கூத்தர்)<br>• துன்பத்தில் உள்ளவருக்கு உதவ வேண்டும் (சடையப்ப வள்ளல் )<br>• ஆணவம் கொள்ள கூடாது (ஒட்டக்கூத்தர்)<br>• தகுதியில்லாரை நிராகரிக்கும் நேர்மை வேண்டும் (குமாரப்புலவர்)<br>• தீர விசாரித்து முடிவெடுக்க வேண்டும் (குலோத்துங்க சோழன்)<br>• உழவுத்தொழிலைப் போற்ற வேண்டும் (கம்பர்)<br><br>**முடிவுரை :**<br>ஏற்புடைய முடிவுரை<br><br>**(ஏதேனும் ஐந்து / ஏற்புடைய விடைகள்)** | 2 புள்ளி<br><br>கருத்து<br>5x3=15<br><br>மொழி 1 |
| 14 (i) | • பிறர் நலத்தில் அன்பும் அக்கறையும்<br>- வேலய்யன், மணிமேகலையைத் தனது குழந்தைகள் போல் கவனித்துக் கொள்ளல், நோய்வாய்ப்பட்ட வேலய்யனை இரவில் கண்விழித்துக் கவனித்துக் கொள்ளல்<br><br>• மனவுறுதி<br>- கணவனை இழத்தல் + தந்தை மரணம் + தம்பி தனிக்குடித்தனம், தனிமரமாக நின்றாலும் வீட்டு வேலை செய்து தன்மானத்துடன் வாழ்க்கையைத் தொடருதல்<br><br>• தொண்டு மனப்பான்மை<br>- மாலை வேளையில் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடம் நடத்துதல்<br><br>• வாசிப்புப் பழக்கம்<br>- மகாத்மா காந்தி, விவேகானந்தர், திரு.வி.க. போன்ற பேரறிஞர்களின் கைவண்ணத்தில் உருவான அறநூல்களை வாங்கிப் படித்துத் தனது அறிவை வளர்த்துக் கொள்ளுதல்<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | கருத்து<br>5x3=15<br><br>மொழி 1 |

| | | |
|---|---|---|
| 14(ii) | **தொடக்கம் :**<br>- சந்திரன் உயர்கல்வியைத் தொடர வாலாசாப்பேட்டைக்கு வருகிறான்; லேய்யனுக்கும் சந்திரனுக்கும் நட்பு மலர்கிறது.<br><br>**உச்சம் :**<br>- தொழுநோயாளியான சந்திரனைக் கண்டு வேலய்யன் மனம் கலங்குகின்றான்.<br><br>**முடிவு :**<br>- நோய் முற்றி சந்திரன் இறக்கிறான். தன் நண்பனின் வேண்டுகோளுக்கு இணங்கி வேலய்யன் இறுதிக் காரியங்களை நிறைவேற்றுகிறான்.<br><br>• ஏதாவது மூன்று கருத்துகள் எழுதினால் போதும் | கருத்து 5x3=15<br><br>மொழி 1 |
| 15 (i) | **• நன்றி மறவாதவள்**<br>- முரடனிடமிருந்து தன்னைக் காப்பாற்றியதுடன் கணிதப் பாடத்திலும் உதவி புரிந்த சந்திரனை மறக்காமல் வேலய்யனிடம் உயர்த்திப் பேசுதல்<br><br>**• அன்பாகப் பழகுபவள்**<br>- சந்திரனுடன் பழக்கம் ஏற்பட்ட பின் அவனுடன் அன்பாகப் பழகுகிறாள். இதனால் சந்திரன் அவளது வீட்டுக்கு அடிக்கடி சென்று வருவதுடன் குடும்பத்தாருடனும் நெருக்கமான உறவு ஏற்படுகிறது; காதல் கொள்கிறான்<br><br>**• பெரியோரின் அறிவுரைக்குக் கட்டுப்படுபவள்**<br>- சந்திரனுடன் அளவறிந்து தெளிவான சிந்தனையுடன் பழகுமாறு தாய் கூறிய அறிவுரைக்குக் கேட்டு நடத்தல்<br><br>**• குற்றவுணர்ச்சிக்கு ஆட்படுபவள்**<br>- சந்திரன் ஒருதலைக்காதல் தோல்வியால் கல்லூரியைவிட்டுத் தலைமறைவானதற்கும் அவனது வாழ்க்கை திசைமாறிப் போனதற்கும் தானே காரணம் என்ற குற்றவுணர்ச்சிக்கு ஆளாகிறாள்.<br><br>**• பிறர் நலத்தில் அக்கறை கொண்டவள்**<br>- தலைமறைவான சந்திரனின் நிலை என்னவானது என வேலையனைச் சந்தித்து விசாரிக்கிறாள்; அவனது ஏதாவது ஆகியிருக்குமோ எனக் கவலை கொள்கிறாள்.<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | கருத்து 5x3=15<br><br>மொழி 1 |
| 15 (ii) | • மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டதை எதிர்த்து கல்லூரி மாணவர்கள் போராட்டம்<br>• சந்திரன், வேலய்யனுடனான நட்பில் நெருக்கத்தைக் குறைத்துக் கொள்ளுதல் - வேலய்யன் மனம் வருந்துதல்<br>• கழிவரையில் நீர் ஊற்றாத சந்திரனுக்கும் சாந்தலிங்கத்திற்கும் இடையே வாய்த்தகராறு<br>• சந்திரன் பெண் வேடமிட்டு நாடகம் நடித்துப் பலரது பாராட்டைப் பெறுதல்.<br>• மாலனின் மூடநம்பிக்கை – வேலய்யனுக்கும் மாலனுக்குமிடையே தர்க்கம் (ரஷியின் பெயரை எழுதுவது, கோயிலில் அர்ச்சனை, சந்திரனின் அறைக்கு மாறுதல்)<br>• சந்திரனின் காதல் தோல்வி – வேலய்யன் சமாதானம் கூறுதல்- கல்லூரியைவிட்டுத் தலைமறைவாகுதல்.<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | கருத்து 5x3=15<br><br>மொழி 1 |

## விடைப்பட்டி - பயிற்றி 2

| பாகம் 1 - பிரிவு 1 (கவிதை) | | |
|---|---|---|
| 1 | நன்மாணாக்கரின் இயல்புகள் | (2 புள்ளி) |
| 2 | **எதுகை :**<br>• ஆசானைத் – கூசாமல்<br>• மாசான – ஆசாரம்<br><br>**மோனை :**<br>• ஆசானை – அவர்சொல்லும்<br>• கூசாமல் – குற்றமுண்டேல்<br>• மாசான – மறந்தேனும்<br>• ஆசாரம் – அறனறிந்த<br><br>**சந்தம் :**<br>• வணங்க – இணங்க<br>• கூற – மாற<br>• ஆசான் – பேசான்<br><br>**இயைபு :**<br>• வேண்டும் - வேண்டும் | (4 புள்ளி) |
| 3 | i) ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவன்<br><br>ii) அதனைக் கேட்டுத் திருத்திக் கொள்ள வேண்டும் | (2 புள்ளி)<br><br>(2 புள்ளி) |

| பாகம் 1 - பிரிவு 2 (நாடகம்) | | |
|---|---|---|
| 4. | - சிறுகதைத் தொகுதிகள்<br>- காவடிச் சிந்து<br>- கம்பராமாயணம்<br>- நாவல்<br>- மொழிபெயர்ப்புகள்<br>- நாடகம் | (2 புள்ளி) |
| 5. (i) | - பல்லவராயன் | (2 புள்ளி) |
| 5. (ii) | - கம்பர் சடையப்பர் வள்ளலின் வீட்டில் இராமாயணம் இயற்றுதல்; திருவரங்கத்தில் இராமாயணத்தை அரங்கேற்றம் செய்தல் | (2 புள்ளி) |
| 6 (i) | - தாழ்வு மனப்பான்மை கொண்டவர்.<br>- மனவுறுதி இல்லாதவர்.<br>- தோல்வியை ஏற்றுக்கொள்ளும் தன்மை இல்லாதவர். | (2 புள்ளி) |
| 6 (ii) | - இலக்கிய நடை | (2 புள்ளி) |
| 6 (iii) | - கம்பருக்குக் கலைமகளின் அருள் பரிபூரணமாக உள்ளது; அதனால்தான், கம்பரின் விருப்பப்படி கலைமகள் அவருக்கு அருள்புரிகிறாள். | (2 புள்ளி) |

| | | |
|---|---|---|
| 6 (iv) | - துமி என்ற சொல்லின் சர்ச்சையில், 'துமி' என்ற சொல் வழக்கில் உள்ளது என்பது நிரூபிக்கப்படுகிறது.<br>- இதனால், அவமானமும் அதிர்ச்சியும் அடைந்த ஒட்டக்கூத்தர் வேகமாகச் செல்கிறார்.<br>- கம்பரும் அவரைத் தொடர்ந்து கூத்தரின் இல்லத்திற்குச் செல்கிறார்.<br>- அங்குக் கூத்தர் தான் எழுதிய இராமாயணச் சுவடிகளைக் கிழித்தெறிகிறார்.<br>- கதவை உடைத்து நுழையும் கம்பர் எஞ்சியிருந்த உத்தர காண்டத்தை மட்டும் மீட்டெடுகிறார். | (3 புள்ளி) |
| **பாகம் 1 - பிரிவு 3 (நாவல்)** | | |
| 7 | - திருவேங்கடம் | (2 புள்ளி) |
| 8 (i) | - சந்திரன், சாந்தலிங்கம் | (2 புள்ளி) |
| 8 (ii) | - கல்வி வாழ்வை உயர்த்தும்<br>- நல்ல நட்பு போற்றத்தக்கது<br>- உயரிய பெண்மை மதிக்கத்தக்கது<br>- மூடநம்பிக்கை வாழ்க்கையைச் சீரழிக்கும்<br>- கொள்கை வகுத்து வாழ்வதே சிறப்பு<br>- குடும்ப உறுப்பினரிடையே குறைவிலா பாசம்<br>- ஆண் பெண் உறவில் கட்டுப்பாடு தேவை<br>- அறநூல்கள் வாழ்வை நெறிப்படுத்தும்<br>- ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கை | (2 புள்ளி) |
| 9 (i) | - மூடநம்பிக்கையை வெறுப்பவன்<br>- நேர்வழியில் உழைத்து ஊதியம் பெறவேண்டும் என எண்ணம் கொண்டவன்<br>- பொது நலத்துடன் வாழ வேண்டும் என உறுதியுள்ளவன். | (2 புள்ளி) |
| 9 (ii) | - கல்லூரி | (2 புள்ளி) |
| 9 (iii) | - மாலன் திருவுளச்சீட்டு, குதிரைப் பந்தையம், லாட்டரி சீட்டுப் போன்ற வழிகளில் பணம் பெற நினைத்து வாழ்க்கையில் சீரழிகிறான். | (2 புள்ளி) |
| 9 (iv) | - திருவுளச் சீட்டு, குதிரைப் பந்தையம், லாட்டரி சீட்டுப் போன்றவற்றில் வேலய்யனுக்கு நம்பிக்கையுள்ளதா என மாலன் வேலய்யனிடம் கேட்கிறான்.<br>- தனக்கு இவற்றில் நம்பிக்கை இல்லை என வேலய்யன் கூறுகிறான்<br>- தெய்வ நம்பிக்கை இருந்தால் பணம் தானே வந்து சேரும் என்கிறான் வேலய்யன்.<br>- இவையாவும் குடிகெடுக்கும் பாழும் நம்பிக்கை என மாலனுக்குப் புரிய வைக்க வேலய்யன் முயற்சி செய்கிறான்.<br>- வேலய்யன் பேசி பயனில்லை என மாலன் கூறுகிறான். | (3 புள்ளி) |

| பாகம் 2 - பிரிவு 1 (கவிதை) | | |
|---|---|---|
| 10 | **முன்னுரை**<br>- கவிஞர் – கவிச்சிட்டு கோ.வி. மணிதாசன்<br>- தலைப்பு – வாழ்ந்து காட்டுவோம்<br>- பாடுபொருள் – சமுதாய முன்னேற்றம்<br>- மையக்கரு – தொழில் வளம் பெருக்கித் துலங்க ஊக்குவித்தல் | 2 புள்ளி |
| | **கண்ணி 1**<br>• மலேசியா தொழில்துறை நாடாக உருமாறுவதில் மும்முரம் காட்டி வருகிறது<br>• பல தொழில் வாய்ப்புகளை நம்மினம் பயன்படுத்திக் கொண்டால் வாழ்க்கையில் முன்னேறலாம்<br>• உலகப்போக்கைப் புரிந்து கொண்டு விழிப்புணர்வுடன் செயல்பட்டால் நன்மை பெறலாம்<br>• அதற்கு மாறாக அலட்சியப் போக்கோடு நாம் இருந்தால் வாழ்க்கையில் பின்தங்கி விடுவோம் | கருத்து 5x3=15 |
| | **கண்ணி 2**<br>• ஆங்கிலேயரால் காடுகளை அழிக்க கொண்டுவரப்பட்டு, பல ரப்பர் தோட்டங்களை உருவாக்கி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் நம் முன்னோர்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.<br>• பழம்பெருமையை மட்டும் பேசிக் கொண்டிருப்பதால் தற்கால நிலையில் நம் வாழ்க்கையில் எந்தவொரு பயனும் கிட்டாது.<br>• வெட்டிப்பேச்சை விட்டுவிட்டு நாமும் தொழிற்துறையில் தடம் பதித்தால் இந்நாட்டில் நாமும் முன்னேறிய இனமாக வாழலாம். | |
| | **கண்ணி 3**<br>• மலேசியாவில் பல இன மக்கள் வாழ்ந்தாலும் நம் அரசாங்கம் அனைவருக்குமே பொதுவான நிலையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது<br>• இதற்குச் சான்றாக நம் நாட்டில் பிற இன மக்கள் வாய்ப்புகளை நன்முறையில் பயன்படுத்திக் கொண்டு செல்வச் செழிப்புடன் வளமாக வாழ்கின்றனர்<br>• ஆனால், நம்மினமோ முன்னேற முடியாமல் தவிக்கிறது | |
| | **கண்ணி 4**<br>• பகுத்தறிவு சிந்தனையிலும் பண்பாட்டு நெறியிலும் நாம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே சிறந்தோங்கி இருந்தோம்.<br>• அப்படிப்பட்ட நம்மினம் இன்று மதிப்பிழந்து முன்னேற்றப் பாதையில் செல்ல முடியாமல் திணறிக் கொண்டிருப்பதற்குக் காரணம் உண்டு<br>• வாழ்வியல் கூறுகளை எடுத்துரைக்கும் திருக்குறளை நாம் புறம் தள்ளியதால்தான் இந்நிலை ஏற்பட்டது | |
| | **முடிவுரை**<br>- ஏற்புடைய முடிவுரை | முடிவு (2 புள்ளி)<br><br>மொழி (1 புள்ளி) |

| | | |
|---|---|---|
| 11(i) | **ஓசைநயம்**<br><br>**எதுகை :**<br>- சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றுவருதல்<br>• காரிருள் – பாரிடை<br>• ஊரினை – பேரறி<br>• அறிஞர்தம் - செறிதரும்<br>• குறுகிய – நறுமண<br>• வானிடை- ஊனிடை<br>• ஆனநற் – தேனிதழ்<br>• சிறுகதை – அறைதனில்<br>• கறையுளம் – நிறைபொருள்<br>• ஓவியம் – காவியம்<br>• மேவிடும் – கூவுவாய்<br><br>**மோனை :**<br>- சீர்களில், முதல் எழுத்து ஓசையால் ஒன்றி வருதல்<br>• காரிருள் – கதிரொளி<br>• பாரிடைத் – பாய்ந்திடும்<br>• ஊரினை – உலகினை<br>• பேரறி – பிறந்த<br>• அறிஞர்தம் – ஆழநீர்<br>• செறிதரும் – செழித்திட<br>• குறுகிய – குவலயம்<br>• நறுமண – நலம்<br>• வானிடை – மாயங்கள்<br>• ஊனிடை – உட்புறம்<br>• ஆனநற் – அற்புதம்<br>• தேனிதழ் – தித்திக்கத்<br>• சிறுகதை – பெருமதி<br>• அறைதனில் – அம்பலத்<br>• கறையுளம் – களைப்பிலே<br>• நிறைபொருள – நீட்டிய<br>• ஓவியம் – உணர்விப்பாய்<br>• காவியம் – கலகல<br>• மேவிடும் – மின்னிடும்<br>• கூவுவாய் – கொட்டுவாய்<br><br>**சந்தம் :**<br>- சீர்களின் எல்லா எழுத்தும் ஓசையால் ஒன்றி வருதல்<br>• வானிடை – ஊனிடை<br>• செய்வாய் - பெய்வாய்<br>• ஓவியம் – காவியம்<br>• தருவாய் – சொல்வாய்<br><br>**இயைபு :**<br>- சீர்களின் இறுதி அசை ஒன்றி வருதல்<br>கூத்துத் – சேர்த்துத்<br>செய்வாய் – பெய்வாய் | கருத்து<br>3x3=9<br><br>மொழி<br>1 புள்ளி |

**அணி நயம்**

**உருவக அணி**

(உவமையைப் பொருளில் ஏற்றல்)

- காரிருள் அகம் – அறியாமை
- கதிரொளி – பத்திரிகை
- துயில்வோர் – செயலாக்கம் அற்றவர்
- எழுச்சி – பத்திரிகை,
- பெண்ணே – பத்திரிகை
- இதய ஓடை – எண்ணம்
- ஆழநீர் – கருத்துகள்
- மொண்டு – அச்சேற்றி
- செழித்திட – மேன்மையுற
- ஊற்றி – வழங்கி
- பெருமதி யூட்டும் தாளே – பத்திரிகை
- நிறைபொருள் – பத்திரிகை
- கோலத் தாளே – பத்திரிகை
- கூத்து – நிகழ்வு

**திரிபு அணி**

(சீர்களின் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க மற்ற எழுத்துகளெல்லாம் ஒன்றி வருதல்)

- வானிடை – ஊனிடை
- ஓவியம் – காவியம்
- செய்வாய் – பெய்வாய்

**பின்வருநிலை அணி**

(வந்த சொல் மீண்டும் வருதல்)

- “செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிக்”
- “நலம் காணார் ஞாலம் காணார்”

**தற்குறிப்பேற்ற அணி**

(அஃறிணையை உயர்திணைப்போல் தன் கருத்தை ஏற்றுதல்)

- குவலயம் ஓங்கச் செய்வாய்
- தித்திக்கத் தருவாய் நித்தம்
- சிறுகதை ஒன்று சொல்லி
- பெருமதி யூட்டும் தாளே
- கறையுளம் தூய்மை செய்வாய்
- களைப்பிலே ஊக்கம் பெய்வாய்
- ஓவியம் தருவாய்
- சிற்பம் உணர்விப்பாய்
- காவியம் தருவாய்
- விகடம் சொல்வாய்
- அம்பலத் திழுத்துப் போட்டு

**உவமை அணி (ஒத்ததை ஒப்பிடுதல்)**

- தேனிதழ் (தேன் போன்றஇதழ்)

**தன்மை நவிற்சி அணி/ இயல்பு நவிற்சி அணி**

(இயல்பான வருணனை)

- வானிடை நிகழும் கோடி
  மாயங்கள், மாறி லத்தில்
- ஊனிடை உயிரில் வாழ்வின்
  உட்புறம் வெளிப் புறத்தே

| | | |
|---|---|---|
| | **சொல்நயம் :**<br>• காரிருள்<br>• துயில்வோர்<br>• இதய ஓடை<br>• செழித்திட<br>(*பிற ஏற்புடைய விடைகள்)<br><br>**பொருள்நயம்**<br><br>**தெரிபொருள் :**<br>உலக விசயங்கள் பலவற்றைத் தெரிந்து கொள்ளவும் மனித வாழ்வியல் கூறுகளை மேம்படுத்தவும் பத்திரிகை துணைப்புரிகிறது<br><br>**புதைபொருள் :**<br>• பத்திரிகைகள் சமுதாயத்திற்குக் கடமை தவறாது பங்காற்ற வேண்டும்<br>• பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளுதல் அவசியம் . | |
| 11(ii) | **தாக்கம் 1**<br>• அறியாமையைப் போக்குகின்றது<br>• விழிப்புணர்வை ஊட்டுகிறது<br>• ஒற்றுமையை வளர்க்கிறது<br>• மக்களின் எண்ணங்களை வளமாக்குகிறது<br>• குற்றங்களைத் தீர்த்து உலக மேன்மைக்கு வித்திடுகிறது<br>• இயற்கை நிகழ்வுகளைத் தெளிவுறுத்துகிறது<br>• உலக மக்களின் அகம், புறம் சார்ந்த வாழ்க்கையை விளக்குகிறது<br>• மனித வாழ்க்கையில் அன்பின் மேன்மையை உணர்த்துகிறது<br>• சிறுகதையின் மூலம் மக்களுக்குப் படிப்பினைகள் கொடுக்கிறது<br>• மக்கள் பார்வைக்குத் தெரியாமல் இரகசியமாக நிகழும் குற்றச் செயல்களைப் பொதுப்பார்வைக்குக் கொண்டு வந்து விழிப்புணர்வைக் கூட்டுகிறது<br>• சோர்ந்திருப்பவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கிறது<br>• கலைகள் வளரச் செய்கிறது<br>• மக்கள் இலக்கிய இன்பத்தைச் சுவைக்க கவிதையை வழங்குகிறது<br>• மக்கள் இரசித்துச் சிரிக்க நகைச்சுவையைக் கொடுக்கிறது<br>• காதல், வீரம் ஒட்டிய செய்திகளையும் கோர்த்துத் தருகிறது<br><br>• ஏற்புடைய பிற விடைகள் | கருத்து<br>3x3=9<br><br>மொழி<br>1 புள்ளி |

| பாகம் 2 - பிரிவு 2 (நாடகம்) | | |
|---|---|---|
| 12 (i) | • **பிறரைப் பாராட்டும் குணம்**<br>கம்பர் → பல்லக்கு மரியாதை → அரசவை → புகழுரை வழங்குதல் : இளமையிலேயே புலமைக்குக் கிடைத்த பேறு<br><br>• **அறிவுச் செருக்கு**<br>கம்பரின் இராமயணப் பாடல் → வாதம் : 'தூமி' தமிழில் இல்லை' → கம்பரைவிட வயதில் மூத்தவர் + தமிழகமெங்கும் சென்றிருத்தல்<br><br>• **தோல்வியை ஏற்கத் துணியாதவர்**<br>'தூமி' சொல் சிக்கல் → மாறுவேடம் தரித்து நகர்வலம் → தயிர் கடையும் பெண்→ 'தூமி' மக்கள் பேச்சு வழக்கில் உள்ளது நிரூபணம் → மனமுடைதல் → இராமாயணச் சுவடிகளைக் கிழித்தெறிதல் → கமப்ரிடம் தோற்றுவிட்டதாகப் புலம்பல்<br><br>• **அரசு மரபுகளைப் போற்றுபவர்**<br>நாட்டிய நிகழ்ச்சி → கம்பர் காற்சிலம்பு பரிசளித்தல் → இடித்துரைத்தல் → அரசனுக்கு மட்டுமே உரிமை உண்டு<br><br>• **போரை ஆதரிப்பவர்**<br>சோழன் பாண்டியனுக்கெதிரான போரில் வெற்றி → ஒட்டக்கூத்தர் உலா பாடுதல் → கம்பரையும் பாட வேண்டுதல் → கம்பர் மறுப்பு → அரசனின் போர் வெற்றியைப் பாடுவது புலவனின் கடமை<br><br>• **நன்றி மறவாதவர்**<br>சடையப்ப வள்ளலின் தந்தையான புதுவை சங்கரன் தன்னை ஆதரித்து புலவராக்கியதைக் குலோத்துங்க சோழனிடம் நினைவுகூர்தல்<br><br>• **தகுதி இல்லாதவரை நிராகரிப்பவர்**<br>குமாரப்புலவர் → இலட்சம் கலித்துறைகோவை → கம்பரின் குலத்தைச் துச்சமாகப் பேசுதல் → போய்விடக் கூறல்<br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | 10<br>(3x3=9<br>+ 1<br>மொழி |
| 12(ii) | • சடையப்ப வள்ளல் வீடு<br>• ஆதித்தர் வீடு<br>• குலோத்துங்க சோழனின் அரசவை<br>• நகர வீதி<br>• ஒட்டக்கூத்தர் வீடு<br>• காட்டுவழி<br>• திருவரங்கம் ரங்கநாதர் கோயில்<br><br>ஒவ்வொரு இடப்பின்னணிக்கும் ஏற்ற நாடகத்தையொட்டிய கதைச் சம்பவங்கள் இருத்தல் வேண்டும்.<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | 10<br>(3x3=9<br>+ 1<br>மொழி |

| | | |
|---|---|---|
| 13(i) | • **தமிழ்ப்பற்று கொண்டவன்**<br>கம்பர் → ஏர் எழுபது → குண்வீரப்பண்டிதர் → பல்லக்கு மரியாதை → அரசவைப்புலவர் → புலவர்களை ஆதரித்துத் தமிழை வளர்க்கும் சோழனைக் கம்பர் புகழுதல்<br><br>• **மக்கள் நலத்தில் அக்கறை கொண்டவன்**<br>வால்மீகி இராமாயணம் → வடமொழி → பாமர மக்களுக்குப் புரியவில்லை → நல்ல கருத்துகள் மக்களைச் சென்றடைய வேண்டும் → தமிழில் இராமாயணம் இயற்றும் பணி (ஒட்டக்கூத்தர் + கம்பர்)<br><br>• **போர் விரும்பி**<br>சோழ சாம்ராஜியத்தை விரிவுபடுத்த எண்ணம் → சேர, பாண்டியருடன் போர் → வெற்றி → சிற்றரசர்களை ஒடுக்குதல்<br><br>• **ஆராய்ந்தறியும் குணம்**<br>'துமி' சொல் சிக்கல் → கம்பர்: தமிழில் உண்டு; ஒட்டக்கூத்தர்: தமிழில் இல்லை → தெரிந்து கொள்ள ஆர்வம் → மாறுவேடம் → நகர்வலம்<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | 10<br>(3x3=9<br>+ 1<br>மொழி |
| 13(ii) | • **காதல்மொழி** → அன்பில் இணைந்த இருவரிடையே எழும் அன்புமொழி<br>அம்பிகாபதி : இனி எதுவானாலும் சரி நாம் தம்பதிகளாகிவிட்டோம். இந்த நிலையிலிருந்து நம்மைத் தெய்வமும் பிரிக்க முடியாது.<br><br>• **வசைமொழி** (திட்டுதல்) → கோபத்தைக் காட்டும் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தி ஒருவரைத் திட்டுதல்<br><br>குலோத்துங்க சோழன் : உன்னை இப்போதே வெட்டித் தசைக் குவியலாகக் குவிக்க முடியும். அதிலும் என் மனம் ஆறாது என்பதற்காக விட்டு வைத்திருக்கிறேன்.<br><br>• **சந்தநடை / அடுக்குமொழி** →ஒத்த ஓசையுடன் சொற்களை அடுக்கிச் சுவைபடக் கூறுதல்<br><br>கம்பர் : கம்பர்ச் சிலம்பி என்பதைவிட அம்பர்ச் சிலம்பி என்பதுதான் உனக்கு அதிகப் பெருமைதரும் பெயராகும்.<br><br>• **இலக்கியநடை** → இலக்கிய நயத்தோடு ஆசிரியர் படைத்திருக்கும் வரிகள்<br>குணவீரபண்டிதர் : தாங்க முடியாத மகாசக்திகள் இந்த உடம்பின் மன அரங்கில் நவரச நடனங்களையும் ஆட முந்துகின்றன.<br><br>• **வருணனை** →ஒன்றின் தன்மையையும் இயல்பையும் சுவைபட அழகிய மொழியில் வெளிப்படுதல்<br>"குமுதன் என்ற வானரத் தலைவன் ஒரு பெரிய மலையைப் பெயர்த்துக் கொண்டு வந்து அணை கட்டுவதற்காகக் கடலில் போட்டான். கடலில் விழுந்த மலை, நடனை ஆடுகிறவர்களைப்போல் சப்தத்தை முழக்கிக் கொண்டு கடலில் அங்குமிங்கும் திரிகிறது. அப்போது அலைகள் மேலெழும்பி அடிக்கின்றன."<br><br>• **இசைமொழி** →பாராட்டுதல்<br>குலோத்துங்கன் : அற்புதமான கற்பனை! விண்ணுக்கும் மண்ணுக்கும் ஓங்கிய ஒரு பிரம்மாண்டமான காட்சி, நாலே வரிகளில் தீட்டப்பட்டுவிட்டது. கம்பரே, இது தன்னிகரற்ற பாடல்! நீர் தன்னிகரற்ற கவிஞர்!<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | 10<br>(3x3=9<br>+ 1<br>மொழி |

| | | |
|---|---|---|
| 14 | **முன்னுரை :**<br>ஆசிரியர் – டாக்டர் மு.வரதராசன்<br>நாவல் – அகல்விளக்கு<br>கருப்பொருள் – நல்லொழுக்கமும் மனக்கட்டுப்பாடும் நல்வாழ்க்கைக்கு அடித்தளம்<br><br>**கருத்து 1** :<br>பிறருக்கு உதவும் பண்புடையவன்<br><br>**சான்று:**<br>• கணிதப் பாடத்தில் குறைந்த மதிப்பெண்கள் பெறும் வேலய்யனுக்குச் சந்திரன் பாடம் சொல்லிக் கொடுக்கிறான்.<br>• பெருங்காஞ்சியில் குளத்தில் குளிக்க ஆசைப்பட்ட வேலய்யனுக்கு நீச்சல் சொல்லிக் கொடுக்கிறான்.<br>• முரட்டு ஆசாமியிடமிருந்து இமாவதியைக் காப்பாற்றுகிறான்.<br><br>**நோக்கம் :**<br>பிறரது தேவையை/ துன்பத்தைப் புரிந்து உதவி செய்ய வேண்டும்<br><br>**கருத்து 2** :<br>பணத்தால் எதையும் சாதித்து விடலாம் என்ற எண்ணம் கொண்டவன்<br><br>**சான்று :**<br>• தாழை ஓடையில் இரு பெண்களுக்குக் காசு கொடுத்து மயக்கிப் பாடச் செய்கிறான்.<br>• பெருங்காஞ்சி பெரிய வீட்டுப் பையன் என்ற ஆணவத்தால் நினைத்தபடி ஊரில் உள்ள அனைத்துப் பெண்களிடமும் ஒழுக்கக்கேடாக நடந்து கொள்கிறான்.<br><br>**நோக்கம் :**<br>பணத்திமிர் கொண்டு பிறரைத் தாழ்த்துவது தவறு<br><br>**கருத்து 3** :<br>நட்பைப் போற்றத் தெரியாதவன்<br><br>**சான்று:**<br>• வேலய்யனுடன் உயர்நிலைப்பள்ளியிலிருந்து பழகி இருந்தாலும் கல்லூரியில் சேர்ந்தவுடன் அவனுடனான நட்பின் நெருக்கத்தைக் குறைத்துக் கொள்கிறான்<br>• ஒரே கல்லூரியில் படித்தாலும் வேலய்யனை அடிக்கடி சந்திப்பதைத் தவிர்க்கிறான்.<br>• நாளுக்குநாள் தங்கள் நட்பு தேய்ந்து போவதை எண்ணி வேலய்யன் மனவேதனை கொள்கிறான்<br><br>**நோக்கம்:**<br>நல்ல நட்பைப் போற்றி மதிப்பது முக்கியம் | 2<br><br>கருத்து<br>5x3=15<br><br>மொழி 1 |
| 15 | **முன்னுரை :**<br>ஆசிரியர் – டாக்டர் மு.வரதராசன்<br>நாவல் – அகல்விளக்கு<br>கருப்பொருள் – நல்லொழுக்கமும் மனக்கட்டுப்பாடும் நல்வாழ்க்கைக்கு அடித்தளம்<br><br>**கருத்து 1**<br>சந்திரன் - ஒருதலைக்காதல்<br>• கல்லூரியில் படிக்கும் பொழுது இமாவதியுடன் பழக்கம்<br>• இமாவதி நெருங்கிப் பழகுதல் - காதல் என ஆசையை வளர்த்துக் கொள்ளல்<br>• இமாவதி திருமணப் பத்திரிகை- ஏமாற்றம்- தலைமறைவு<br>• கல்வி பாதிக்கப்படுதல்/ அரைப்படிப்பு – எதிர்காலம் பாழாகுதல் | 2<br><br>கருத்து<br>5x3=15<br><br>மொழி 1 |

| | | |
|---|---|---|
| | **கருத்து 2**<br>மாலன் – மூடநம்பிகையால் ஏமாற்றம்<br>• கல்லூரி தொடக்கம் – ரிஷியின் பெயரை எழுதுதல், இஷ்டசித்தி குளிகை<br>• சுயத்தொழில் – உழைப்பை நம்பாமல் குறுக்கு வழியில் முன்னேற எண்ணம்- பித்தளையைத் தங்கமாக மாற்றும் சாமியார் , ஆவியுடன் பேசும் நண்பர் – பணத்தை விரயமாக்குதல் – மனைவி கற்பகத்தின் நகைகளை விற்றல் – கடன் வாங்குதல்<br>• பணப்பற்றாக்குறை- நிலத்தைவிற்றுப் பணம் தருமாறு மாமனாரிடம் கேட்டல்- சாமண்ணா மறுப்பு- கற்பகத்தைப் பிரிந்து வாழ்தல்<br>• நிம்மதியும் மகிழ்ச்சியுமற்ற இல்லற வாழ்க்கை<br><br>**கருத்து 3**<br>சாமண்ணா – ஒழுக்கமற்ற மகன்<br>• கல்லூரியைவிட்டுத் தலைமறைவு – பிரிவுத்துன்பம்<br>• நீலகிரிமலை – ஊருக்குத் திரும்பி வர கெஞ்சி அழைத்தல்<br>• பெருங்காஞ்சி ஊர் – பல பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்தல்<br>• ஊரார் தூற்றுமொழி - குடும்பத்திற்கு அவப்பெயர் – பரம்பரையாகக் கட்டிக்காத்த மானம் சிதைத்தல் - மனவுளைச்சல்<br><br>**கருத்து 4**<br>மணிமேகலை – எளிய வாழ்க்கை<br>• அதிக அளவில் வரதட்சணை கொடுக்க இயலாமை – வரன் தடைபடுதல் – வரதட்சணை வேண்டாமென்று கூறிய தமிழாசிரியருக்குத் திருமணம்<br>• 70 ரூபாய் வருமானம் – பற்றாக்குறை – கணவர் கோடுபோட்டு வாழ்க்கை<br>• பட்டுச் சேலை, சினிமா – ஆசையைக் கடுப்படுத்துதல் - வசதியற்ற எளிய வாழ்க்கை<br><br>**கருத்து 5**<br>பாக்கிய அம்மையார் (ஆதரவற்ற நிலை)<br>• திருமணமான ஒரே மாதத்தில் கணவர் மரணம் – இளம் விதவை – தந்தை, தம்பியின் ஆதரவில் வாழ்தல் – தந்தை மாரடைப்பால் இறப்பு - தம்பி திருமணமாகி தனிக்குடித்தனம் – தனிமைத்துன்பம் - பிற வீட்டுக் குழந்தைகளிடம் அன்பைப் பரிமாறுதல்<br>• வேலய்யன் வீட்டில் வேலை செய்தல்- சுயக்காலில் நிற்றல்<br><br>**முடிவுரை** : ஏற்புடைய முடிவுரை | |

## விடைப்பட்டி - பயிற்றி 3

| பாகம் 1 - பிரிவு 1 (கவிதை) | | |
|---|---|---|
| 1 | நாளிதழின் கடப்பாடு | (2 புள்ளி) |
| 2 | **உருவக அணி :**<br>• இதய ஓடை – எண்ணம்<br>• ஆழநீர் – கருத்துகள்<br>• மொண்டு – அச்சேற்றி<br>• செழித்திட – மேன்மையுற<br>• நறுமண இதழ்ப் பெண்ணே – பத்திரிகை<br><br>**பின்வருநிலை அணி :**<br>• "ஊற்றி ஊற்றி"<br>• "நலம் காணார் ஞாலம் காணார்"<br><br>**தற்குறிபேற்ற அணி :**<br>"ஓங்கச் செய்வாய்" | (4 புள்ளி) |
| 3 | i) அறிஞர்களின் எண்ணங்கள்<br><br>ii) உலக விசயங்களை அறியாதவர்களாக இருப்பர் | (2 புள்ளி)<br><br>(2 புள்ளி) |

| பாகம் 1 - பிரிவு 2 (நாடகம்) | | |
|---|---|---|
| 4. | - சிறுகதைச் செம்மல் | (2 புள்ளி) |
| 5. (i) | - கம்பர்<br>- ஒட்டக்கூத்தர் | (2 புள்ளி) |
| 5. (ii) | • பாடல் உத்தி<br>• தனிமொழி உத்தி<br>• கதைகூறல் உத்தி<br>• நிரட்சி உத்தி<br>• பின்நோக்கு உத்தி | (2 புள்ளி) |
| 6 (i) | • கவிபுலமையைப் போற்றுபவர்<br>• பிறர் நலத்தில் அக்கறை கொண்டவர் | (2 புள்ளி) |
| 6 (ii) | - ஆள்வோர் சமுதாயம் (கம்பர்- அரசவைப் புலவர்)<br>- ஆளப்படுவோர் சமுதாயம் (சடையப்ப வள்ளல்- நிலக்கிழார்) | (2 புள்ளி) |
| 6 (iii) | - கம்பர் இயற்றவிருக்கும் இராமரின் கதையான இராமாயணம் | (2 புள்ளி) |
| 6 (iv) | • ஒட்டக்கூத்தர் தனது சுவடிகளைக் கிழித்து அமைதியில்லாத சூழலில் இருப்பதைக் கம்பர் உணர்கிறார்.<br>• மன்னரிடமும் அரசியிடமும் விடைபெற்றுத் திருவெண்ணெய் நல்லூருக்குத் திரும்புகிறார்.<br>• கம்பரும் ஒட்டக்கூத்தரும் மன்னரின் விருப்பத்திற்கு இணங்க அரண்மனையில் இராமாயணம் இயற்றுவதைப் பற்றி சடையப்பவள்ளல் கேட்கிறார்.<br>• கம்பர் இராமாயணத்தைச் சடையப்பவள்ளலின் வீட்டில்தான் இயற்றப்போவதாகக் கூறுகிறார்.<br>• தமது வீட்டில் இராமாயணம் இயற்றப்போவதாக மன்னர் அறிந்தால் என்ன நினைப்பார் என சடையப்ப வள்ளல் வினவுகிறார் | (3 புள்ளி) |

| பாகம் 1 - பிரிவு 3 (நாவல்) | | |
|---|---|---|
| 7 | - இந்திய ஜனாதிபதியின் சாகித்திய அகாடெமி விருது | (2 புள்ளி) |
| 8 (i) | - வள்ளி | (2 புள்ளி) |
| 8 (ii) | • கயற்கண்ணி<br>• மணிமேகலை<br>• பாக்கிய அம்மையார்<br>• சந்திரனின் அம்மா<br>• வேலய்யனின் அம்மா<br>• இமாவதி<br>• வள்ளி<br>• திருமகள் | (2 புள்ளி) |
| 9 (i) | • பிறர் நலத்தில் அக்கறையுள்ளவர்<br>• சிக்கல்களுக்கு உடனே தீர்வு காணவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.<br>• பிறர் துன்பத்தைப் புரிந்துகொண்டு செயல்படுபவர்/ இரக்க மனம் கொண்டவர் | (2 புள்ளி) |
| 9 (ii) | - இலக்கிய நடை | (2 புள்ளி) |
| 9 (iii) | - சந்திரனின் ஒழுக்கங்கெட்ட போக்கால் சாமண்ணா மனமுடைந்து இருந்தார் | (2 புள்ளி) |
| 9 (iv) | • குழந்தையையும் மனைவியையும் பார்க்க வேலய்யன் ஈரோடிலிருந்து ஊருக்குத் திரும்புகிறான்.<br>• ஊரில் கற்பகத்தைச் சந்திக்கிறான். கற்பகத்தின் கழுத்திலும் கையிலும் நகைகள் காணப்படாததைப் பார்த்து விபரம் கேட்க நினைத்து அவளுடைய துயரத்தைக் கிளற வேண்டாமென அமைதியாக இருக்கிறான்.<br>• மனைவி கயற்கண்ணியின் மூலம் கற்பகத்தின் நிலைமையையும் மாலனுடைய போக்கையும் அறிந்து திகைத்துப் போகிறான். | (3 புள்ளி) |

| பாகம் 2 - பிரிவு 1 (கவிதை) | | |
|---|---|---|
| 10 | **முன்னுரை**<br>- கவிஞர் – பாப்பா பாவலர் முரசு நெடுமாறன்<br>- தலைப்பு – கல்வி<br>- பாடுபொருள் – கல்வி / /மையக்கரு – தாய்மொழிக் கல்வியே தகுதியுடையோராக்கும்<br><br>**தெரிநிலைக் கருத்து :**<br>• அன்றாட வாழ்வியலில் நாம் காணும் அனைத்துக் காட்சிகளிலும் கேட்கும் மொழிகளிலும் பல நுட்பமான விசயங்கள் புதைந்து கிடக்கின்றன.<br>• அவற்றை உணர்ந்து நமது சிந்தனை கருவூலத்தைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாக அமைவது கல்வியே.<br>• பண்டைய மனித வாழ்க்கையின் நெறிமுறைகளை நாம் தெரிந்து கொள்ளவும் இன்றைய வாழ்வியல் நடைமுறைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் கல்வி வழிகாட்டுகிறது.<br><br>• கல்வி கற்காதவர்களுக்குக் காணும் காட்சியெல்லாம் வெறும் இருளாகத்தான் தெரியும்; அதில் அடங்கியுள்ள உண்மைகள் அவர்களுக்குப் புலப்படா.<br>• கற்றவர்கள் இனிமையாக மொழியும் கருத்துகள்கூட அவர்களுக்குப் பொருளற்ற உளறலாகத்தான் தெரியும்.<br>• இத்தகைய மனிதர்கள் மொழியையும் கலை பண்பாட்டினையும் ஆழமாகக் கற்றுணராமல் அவற்றைப் போல செய்ய முனைவது வெறும் நடிப்பாக மட்டுமே இருக்கும்.<br>• இதனால்தான் வள்ளுவ ஆசானும் கல்வி கற்காதவரை விலங்குக்கு ஒப்பாகக் குறிப்பிடுகிறார்.<br><br>• மனித நாகரிக வளர்ச்சியில் மொழியே கைக்கொடுத்தது; சமுதாயமாக வாழத் தொடங்கையில் ஒருவர்கொருவர் தொடர்பு கொள்ளவும் தகவல்களைப் பரிமாறிக் கொண்டு அறிவை வளர்த்துக் கொள்ளவும் மொழியே அத்தியாவசியத் தேவையாகியது.<br>• அத்தகைய மொழிகளின் வளர்ச்சியின் பயனாகத் தோன்றியதே கல்வி. மனித இனம் தனக்கென அழகானதொரு பாதை வகுத்து வாழ்க்கையில் முன்னேற கல்வி பெரும் பங்காற்றியது.<br><br>• கல்வியினால் ஒரு தனி மனிதனின் சிறப்பும் ஓங்கும்<br>• தனிமனிதனுக்குக் கிடைக்கும் சிறப்பு அவன் சார்ந்த இனத்திற்கும் கிட்டும் என்பது உண்மை. கல்வியில் சிறந்த இனத்தாரை மற்ற இனத்தாரும் மதித்துப் போற்றுவர்<br><br>• கல்வி என்பது என்னவென்று பலரும் அறியாது இருக்கின்றனர்; ஏட்டுக்கல்வியைப் பெற்றுத் தேர்வெழுதி சான்றிதழ் பெறுவதுமட்டும் கல்வியன்று.<br>• வெறும் சான்றிதழைக் கொண்டு பிழைப்புக்கு வழிதேடிக்கொள்வதால் மட்டும் மனித வாழ்க்கை நலம் பெற்று விடாது.<br>• கல்வியின் வழி வாழ்வின் அறக்கருத்துகளைப் பயிலாதவர்களின் உள்ளம் ஒன்றும் அடையாத வெற்றிடமாகத்தான் இருக்கும்.<br><br>**முடிவுரை**<br>- ஏற்புடைய முடிவுரை | 2 புள்ளி<br><br>கருத்து<br>5x3=15<br><br>முடிவு<br>(2 புள்ளி)<br><br>மொழி<br>(1 புள்ளி) |

| | | |
|---|---|---|
| 11(i) | **எதுகை:**<br>(சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றி வருவது)<br><br>• பொய்மலிந்து – மெய்யுரைக்க<br>• நெஞ்சிலொன்று – வஞ்சமின்றி<br>• பண்பிழந்து – பெண்மையினைத்<br>• பொதுப்பணத்தைச் – புதுமலர்ச்சி<br>• கவிதைமனம் – புவிசிறக்கப்<br>• யார்பாட்டுக் – ஊர்பாட்டைக்<br>• பதவிக்கே – உதவிக்கே<br>• அழுக்காறு – இழுக்காறு<br><br>**மோனை :**<br>(சீர்களில், முதல் எழுத்து ஓசையால் ஒன்றி வருவது)<br>• பொய்மலிந்து – போய்த்தழுவும்<br>• மெய்யுரைக்க – மேதினியில்<br>• நெஞ்சிலொன்று – நிகழ்த்துகின்ற<br>• வஞ்சமின்றி – வலியுறுத்தும்<br>• பண்பிழந்து – பதராக்கும்<br>• பெண்மையினைத் – பேசவந்த<br>• பொதுப்பணத்தைச் – போய்ப்பதுக்கும்<br>• புதுமலர்ச்சி – போக்கிழந்த<br>• கவிதைமனம் – கழுகுகளின்<br>• புவிசிறக்கப் – புத்துலகப்<br>• யார்பாட்டுக் – எதிர்பாட்டுப்<br>• ஊர்பாட்டைக் – ஒதுங்கிநிற்கும்<br>• பதவிக்கே – பச்சோந்திக்<br>• உதவிக்கே – ஒருபெரிய<br>• அழுக்காறு – ஆமைகளின்<br>• இழுக்காறு – எண்ணிவந்த<br>• தெள்ளுதமிழ் – தேய்கின்ற<br>• வள்ளுவனை – வந்தவன்நான்<br><br>**சந்தம் :**<br>(சீர்களின் எல்லா எழுத்தும் ஓசையால் ஒன்றி வருவது சந்தம்)<br>• பதவிக்கே – உதவிக்கே<br>• அழுக்காறு – இழுக்காறு<br><br>• **ஏதாவது மூன்று கருத்துகள் எழுதினால் போதும்** | கருத்து<br>3x3=9<br><br>மொழி<br>1 புள்ளி |
| 11(ii) | • உண்மையை மட்டுமே பேசி வாழ வேண்டும்<br>• உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசக் கூடாது<br>• பெண்மையைத் தெய்வமெனப் போற்ற வேண்டும்<br>• மக்களுக்குச் சொந்தமான பொதுப் பணத்தைக் கொள்ளையடிக்கக் கூடாது<br>• மக்களின் முன்னேற்றத்திற்காகப் புதிய சிந்தனைகளை முன்வைத்து செயலாற்ற வேண்டும்.<br>• உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத கழுகுகளைப்போல் வாழக் கூடாது<br>• சமுதாய நலனுக்காக முன்வைக்கப்படும் திட்டங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுதல் அவசியம்<br>• பதவிக்காகச் சூழ்நிலைக்கேற்ப பச்சோந்திகளைப்போல் தங்களை மாற்றிக் கொள்ளக் கூடாது.<br>• பொறாமையை உள்ளத்தில் வளர்த்துக் கொள்ளக் கூடாது<br>• தமிழ்ச் சான்றோர்கள் கொடுத்துச் சென்ற நீதிநெறிகளைப் பின்பற்றி வாழ வேண்டும்<br><br>**(ஏற்புடைய பிற விடைகள்)** | கருத்து<br>3x3=9<br><br>மொழி<br>1 புள்ளி |

| பாகம் 2 - பிரிவு 2 (நாடகம்) | | |
|---|---|---|
| 12 | முன்னுரை<br>- ஆசிரியர் - கு.அழகிரிசாமி<br>- நாடகம் - கவிச்சக்கரவர்த்தி<br>- கருப்பொருள் : கம்பரின் தனித்துவமும் கவித்துவமும்<br><br>**கருத்து 1**<br>**கம்பரின் கவித்துவம்**<br>• **ஏர் எழுபது** - உழவர்களையும் உழவுத்தொழிலையும் போற்றும் நூல்; சடையப்ப வள்ளலின் வீட்டில் அரங்கேற்றம்; குணவீரப்பண்டிதர் உட்பட அவையோரின் பாராட்டைப் பெற்ற நூல்.<br><br>• **இராமாயணம்** - குலோத்துங்க சோழனின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழில் இராமாயணம் இயற்றுதல்; 'குமுதன் இட்ட' எனத் தொடங்கும் பாடலைக் குலோத்துங்கனும் அரசியும் பாராட்டுதல்; ஸ்ரீ ரங்கம் ரங்கநாதர் கோவிலில் அரங்கேற்றம்; பல நாட்டு மன்னர்களும் சிறப்பு செய்தல் (குலோத்துங்க சோழன், காகதீய மன்னன், பாண்டிய மன்னன்)<br><br>**கம்பரின் தனித்துவம்**<br>• **செய்ந்நன்றி மறவாதவர்**<br>- அரசவைப் புலவராகத் தகுதி உயர்ந்தாலும் தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலை மறக்கவில்லை (திருவெண்ணெய் நல்லூருக்குச் செல்லுதல்; இராமாயணத்தில் இராமருக்கு இணையாக வைத்து 'சரராமர்' எனப் பாடுதல்)<br><br>• **புதுமை விரும்பி**<br>- அரசனைப் பற்றி உலாவும் பரணியும் பாடி பரிசில் வாங்க நினைக்கும் பெரும்பாலாரான புலவர்களின் பாடுபொருளிலிருந்து மாறுபட்டு உலகத்தை வாழ்விக்கும் உழவர்களைச் சிறப்பித்து 'ஏர் எழுபது' பாடுதல்.<br><br>• **அடிமைத்தனத்தை வெறுத்துச் சுதந்திரமாகச் செயல்பட எண்ணுபவர்**<br>- சோழன் → ஆஸ்தானகவி → கம்பர் மறுப்பு → 'கூண்டுக்கிளி' அல்ல ; அரசனை மட்டும் உலா+ பரணி பாட இயலாது → உலகக்கவி (உலகமே பயன்பெறும் இலக்கியங்களைப் படைக்கவே விருப்பம்)<br><br>• **மரபை மீறுபவர்**<br>- அரசவை → நாட்டிய நிகழ்ச்சி → காற்சிலம்பு → நாட்டியப்பெண்ணுக்குப் பரிசு →<br>அரசவை மரபை மீறி விட்டதாக ஒட்டக்கூத்தர் இடித்துரைத்தல் → கம்பர் : கலையைப்<br>போற்றும் உரிமை அனைவருக்கும் உண்டு எனத் துணிந்து கூறுதல்<br><br>• **போரை வெறுப்பவர்**<br>- சோழன் vs பாண்டியன் → சோழன் போரில் வெற்றி → ஒட்டக்கூத்தர் உலா பாடுதல்க →ம்பர் பாட மறுப்பு (போர்= உயிர்பலி + துன்பம் → மனித நேயம் வேண்டும்)<br><br>*(*பிற ஏற்புடைய விடைகள்)*<br><br>முடிவுரை : ஏற்புடைய விடை | 2 புள்ளி<br><br>கருத்து 5x3=15<br><br>மொழி 1<br><br>முடிவு (2 புள்ளி) |

| | | |
|---|---|---|
| 13 | **முன்னுரை :**<br>ஆசிரியர் – கு.அழகிரிசாமி<br>நாடகம் – கவிச்சக்கரவர்த்தி<br>கருப்பொருள் – கம்பரின் கவித்துவமும் தனித்துவமும்<br><br>**கருத்து :**<br>• உழவுத்தொழில் போற்றுதற்குரியது<br>• சுதந்திர உணர்வு சாதனைக்கு வழிவகுக்கும்<br>• தமிழ்ச் சான்றோர்கள் போற்றப்படுவர்<br>• புலவர்களின் பரந்த நோக்குநிலை<br>• புலமைத்திறத்தால் குலம் சிறக்கும்<br>• புலமை அனைவராலும் போற்றுதற்குரியது<br>• தகுதி அறிந்து செயல்படுவது சிறப்பு<br>• தீர விசாரித்து முடிவெடுத்தலே சிறப்பு<br>• ஆணவம் அழிவுக்கு வித்திடும்<br>• மக்கள் நலன் காப்பது மன்னன் கடமை<br><br>**முடிவுரை :**<br>ஏற்புடைய முடிவுரை<br><br>*(ஏதேனும் ஐந்து / ஏற்புடைய விடைகள்)* | 2 புள்ளி<br><br>கருத்து<br>5x3=15<br><br>மொழி 1 |
| 14 (i) | **• காந்தீயக் கொள்கைகளைப் போற்றுபவர்**<br>- கல்லூரி போராட்டம் - வேண்டாம் - காந்தியின் தூயக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும்<br>- கழிவறையில் சந்திரன் நீர் ஊற்றாமை- காந்தியின் தூய்மையைப் பேணும் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்<br><br>**• விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கொண்டவர்**<br>- சந்திரன் கழிவறையில் நீர் ஊற்றாமை - வாக்குவாதம் - விடுதி செயலார்- தானே முன்வந்து மன்னிப்புக் கேட்டல் - மூத்த மாணவர் என்ற ஆணவம் இல்லை<br><br>**• பிறர் நலத்தில் அக்கறை கொண்டவர்**<br>- நீலகிரிமலை - சந்திரன் ஒளிந்து வாழ்வதை அறிதல் - வேலய்யனிடம் கூறி உடனே அவனை ஆபத்திலிருந்து காப்பாற்றும்படிக் கூறுதல்<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | கருத்து<br>5x3=15<br><br>மொழி 1 |

| | | |
|---|---|---|
| 14(ii) | **வாலாசாப்பேட்டை**<br>• வேலய்யனின் சொந்த ஊர்<br>• மிகவும் பழமையான ஊர்.<br>• இங்குள்ள உயர்நிலைப்பள்ளியில் தன் கல்வியைத் தொடர பெருங்காஞ்சி கிராமத்திலிருந்து சந்திரன் வந்தான். வேலய்யனும் சந்திரனும் ஒன்றாகக் கல்வி கற்று நெருங்கிய நட்பு கொண்டனர்.<br>• இங்குள்ள பாலாற்றங்கரையில் சந்திரனும் வேலய்யனும் தங்கள் பொழுதைக் கழித்தனர்.<br>• வாலாசாப்பேட்டையில் அண்டை வீட்டுக்காரர்களாய் அருகருகே வாழ்ந்த வேலய்யன், சந்திரன், பாக்கிய அம்மையார் குடும்பத்தினர் அன்புடன் பழகி உறவு கொண்டனர்.<br>• ஆண்டுதோறும் நடைபெறும் பங்குனி உத்திர விழாவில் கலந்து கொள்ள பல ஊர்களிலிருந்து மக்கள் வருவர். சந்திரனின் குடும்பத்தினரும் கிராமத்திலிருந்து வந்து இவ்விழாவில் கலந்து கொண்டர்.<br><br>**பெருங்காஞ்சி கிராமமும்**<br>• சந்திரன் பிறந்து வளர்ந்த சொந்த ஊராகும்.<br>• சந்திரனின் தந்தை சாமண்ணா இவ்வூரில் பரம்பரை நிலக்கிழாராகவும் ஊர் மக்களால் பெரிதும் மதிக்கப்படுவராகத் திகழ்கிறார்.<br>• கிராமத்து வாசனையே இல்லாத வேலய்யன் தனது பள்ளி விடுமுறையில் பெருஞ்காஞ்சி கிராமத்திற்கு வந்து சந்திரன் குடும்பத்தினருடன் பொழுதைக் கழிக்கிறான்.<br>• குளத்தில் நீச்சல் அடிப்பது, நுங்கு சாப்பிடுவது, தாழை ஓடையின் அழகை இரசிப்பது எனக் கிராமத்து மண் வாசனையை நுகர்ந்து மன மகிழ்ச்சி அடைகிறான்.<br>• சந்திரனோ பெரிய வீட்டுப்பையன் என்ற நிலையில் பெருங்காஞ்சி ஊர் மக்களால் மதிக்கப்படுவனாக இருந்தாலும் பின்னாளில் ஊர்ப் பெண்களிடம் ஒழுக்கக்கேடாக நடந்து கொண்டதால் ஊர் மக்களாலேயே இகழ்ந்துரைக்கப்படும் நிலைக்கு ஆளாகிறான்; குடும்பத்திற்கு அவமானத்தைத் தேடித் தருகிறான்.<br><br>**கல்லூரி**<br>• அழகும் அறிவும் பெற்ற சந்திரனின் வாழ்க்கை திசை மாறிப் போவதற்குக் கல்லூரியே முக்கிய களமாக விளங்குகிறது.<br>• கல்லூரியில் சந்திரனும் வேலய்யனும் ஒன்றாகப் படித்தாலும் அவர்களின் நட்பு இங்குதான் தேய்ந்து போகிறது.<br>• சந்திரன் வேலய்யனுடனான நட்பின் நெருக்கத்தைக் குறைத்துக் கொள்கிறான். வேலய்யனே தேடி வந்தாலும் அவனைப் புறக்கணிக்கிறான்.<br>• சந்திரன் கல்வியில் நாட்டத்தைச் செலுத்தாமல் நாடகம் நடிப்பது, கடற்கரைக்குச் செல்வது எனப் புறநடவடிக்கைகளில் ஈடுபடுகிறான்.<br>• இமாவதியிடம் கொண்ட ஒருதலைகாதல் தோல்வியால் கல்லூரியைவிட்டு தலைமறைவாகிறான். ஆனால், கல்வியில் சுமாராக இருந்த வேலய்யனோ ஒழுக்கத்தில் உறுதியாக இருந்ததுடன் கல்வியில் முழு கவனம் செலுத்தி பி.ஏ பட்டம் பெறுகிறான்.<br><br>**உயர்நிலைப்பள்ளி**<br>• வேலய்யனும் சந்திரனும் உயர்நிலைப்பள்ளியில் ஒன்றாகக் கல்வி கற்கின்றனர்<br>• சந்திரன் ஆசிரியர், கல்வியதிகாரி ஆகியோரின் பாராட்டுகளைப் பெறுகிறான்<br>• எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் சந்திரன் வெற்றி பெற்று கல்லூரியில் நுழைகிறான்; வேலய்யன் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மீண்டும் அதே வகுப்பில் ஒரு வருடம் பயில்கிறான்.<br><br>**நீலகிரிமலை**<br>• கல்லூரியைவிட்டுத் தலைமறைவான சந்திரன் இங்கு ஒளிந்து வாழ்கிறான்<br>• தாயம்மா என்ற சிறை கைதி ஒருவனின் மனைவியுடன் தகாத உறவு வைத்துள்ளான்<br><br>*(* ஏற்புடைய பிற விடைகள்)* | கருத்து 5x3=15<br><br>மொழி 1 |

| | | |
|---|---|---|
| 15 (i) | **வாய்த்துடுக்கு மிக்கவள்**<br>• தனது அத்தை மகளாக இருந்தாலும் வாய்த்துடுக்கு அதிகம் இருந்ததால் வேலய்யன் ஆரம்ப காலக்கட்டத்தில் அவளை வெறுத்தான்; கற்பகத்தின் மீது விருப்பம் கொண்டான்.<br><br>**சினிமா மோகம் கொண்டவள்**<br>• அடிக்கடி சினிமாவுக்குச் செல்ல விரும்புதல்<br>• அவளது சினிமா மோகத்தைக் குறைக்க வேலய்யன் நடிகைகளின் மீது ஆர்வம் கொள்வது போல நடித்தல்<br>• மனம் திருந்துதல்<br><br>**இரக்க குணம் கொண்டவள்**<br>• கணவனைப் பிரிந்து வாழும் கற்பகத்தின் நிலையைக் கண்டு இரக்கம் கொள்ளுதல்<br>• வேலய்யனை மாலனிடம் பேசி கற்பகத்தை அழைத்துச் செல்லுமாறு கூறுதல் பெரியோரின் அறிவுரைக்கு மதிப்புக் கொடுத்தல்<br>• இல்லற வாழ்க்கையைப் பற்றி பாக்கிய அம்மையார், மணிமேகலைக்குக் கூறிய அறிவுரைகளைத் தானும் அமர்ந்து கேட்டல்<br><br>**நட்பைப் போற்றுபவள்**<br>• கற்பகத்துடன் நட்பு கொள்கிறாள்.<br>• அவளுக்கு அடிக்கடி கடிதம் எழுதி நலம் விசாரிக்கிறாள்; ஆறுதலாக இருக்கிறாள்.<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | கருத்து 5x3=15<br><br>மொழி 1 |
| 15 (ii) | **• பின்நோக்குஉத்தி**<br>(கடந்த கால நிகழ்வுகளைக் கதையோட்டத்திற்கு ஏற்ப பின்நோக்கிப் பார்த்தல்)<br><br>எ.கா:<br>- வேலய்யனுக்கும் தனக்கும் நட்பு மலர்ந்த காலக்கட்டத்தை நினைத்துப் பார்த்தல்.<br><br>• கதை கூறல்<br>(கதைப்பாத்திரங்களே கதையைக் கூறி கதையை நகர்த்துவது)<br><br>எ.கா:<br>வேலய்யன், பாக்கிய அம்மையாரைப் பற்றியும் அவரது குடும்பத்தைப் பற்றியும் கூறுதல்.<br><br>• கடித உத்தி<br>(கதைப்பாத்திரம் தனது எண்ணங்களையும் உணர்வுகளையும் கடிதத்தின் வழி வெளிப்படுத்த பயன்படும் உத்தியாகும்)<br><br>எ.கா:<br>இமாவதி சந்திரனுக்குத் தன் திருமணத்தைப் பற்றி தெரிவிக்க கடிதம் எழுதுதல்.<br><br>• உரையாடல்<br>(ஒன்றுக்கும் மேற்பட்டோர் ஒருவருக்கொருவர் பேசி கதையை நகர்த்துவது)<br><br>எ.கா:<br>- கல்வி அதிகாரியும் சாமண்ணாவும் சந்திரனின் மேற்கல்வி குறித்து உரையாடுகின்றனர்.<br><br>• குறியீடு<br>(கருத்தையோ தன்மையையோ விளக்குவதற்குக் குறியீடுகளைப் பயன்படுத்துவது)<br><br>எ.கா:<br>- அரளிச்செடியைச் சந்திரனுக்கும் துளசிச் செடியை வேலய்யனுக்கும் ஒப்பிடுதல் | கருத்து 5x3=15<br><br>மொழி 1 |

| | | |
|---|---|---|
| | • நனவோடை<br>(தன் மனக்கண் வழி காணுகின்ற காட்சியாகவும் எண்ணங்களின் பதிவாகவும் அமைதல்)<br>எ.கா: பெருங்காஞ்சி ஊரில் கிழவனும் கிழவியும் பேசியதைக் கேட்டு மனக்குழப்பம் அடைந்து சந்திரனின் நிலையை எண்ணிப் பார்க்கிறான் வேலய்யன்.<br><br>(* பிற ஏற்புடைய கருத்துகள்) | |

## விடைப்பட்டி - பயிற்றி 4

| பாகம் 1 - பிரிவு 1 (கவிதை) | | |
|---|---|---|
| 1 | தன்முனைப்பு | (2 புள்ளி) |
| 2 | **எதுகை :**<br>• காலங்கள் – கோலங்கள்<br>• நாலடி – காலடிச்<br><br>**மோனை :**<br>• காலங்கள் – கருத்தினில்<br>• கோலங்கள் – குறுகியே<br>• நாலடி – நடையியல்<br>• காலடிச் – கலங்குதல்<br><br>**சந்தம் :**<br>• காலங்கள் – கோலங்கள்<br>• செய்வதுவா – உய்வதுவா<br>• நாலடி – காலடி<br>• நாலடி – ஏழடி<br>• உலகடியா – நிலையடியா<br><br>**இயைபு :**<br>• செய்வதுவா – உய்வதுவா<br>• உலகடியா – நிலையடியா<br><br>**முரண்தொடை :**<br>நாலடி முன்செல்ல – ஏழடிபின் தள்ளும் | (4 புள்ளி) |
| 3 | i) வாழ்க்கையில் ஏற்பட்டுவரும் பரிணாம வளர்ச்சி /மாற்றங்கள்<br><br>ii) பட்டறிவாகக் கொண்டு முன்னேற வேண்டும் | (2 புள்ளி)<br><br>(2 புள்ளி) |

| பாகம் 1 - பிரிவு 2 (நாடகம்) | | |
|---|---|---|
| 4. | • மாக்சிம் கார்க்கின் 'அமெரிக்காவிலே<br>• லெனினுடன் சில நாட்கள்<br>• யுத்தம் வேண்டாம்<br>• விரோதி பணியாவிட்டால் | (2 புள்ளி) |
| 5. (i) | - நாட்டரசன் கோட்டை | (2 புள்ளி) |
| 5. (ii) | • செய்ந்நன்றி மறவாமை வேண்டும்.<br>• நாமே புகழைத் தேடிப் போகக் கூடாது.<br>• சான்றோரைப் போற்ற வேண்டும்.<br>• தோல்வியை ஏற்கும் மனநிலை வேண்டும்.<br>• துன்பத்தில் உள்ளவருக்கு உதவ வேண்டும்.<br>• ஆணவம் கொள்ளக் கூடாது.<br>• தகுதியில்லாரை நிராகரிக்கும் நேர்மை வேண்டும்.<br>• தீர ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.<br>• உழவுத்தொழிலைப் போற்ற வேண்டும் | (2 புள்ளி) |
| 6 (i) | • வாசிப்புப் பழக்கம் கொண்டவர்<br>• முயற்சி உடையவர்<br>• சான்றோரைப் போற்றுபவர். | (2 புள்ளி) |

| | | |
|---|---|---|
| 6 (ii) | - மாவண்டூர் சிங்கன் உலைக்களம் | (2 புள்ளி) |
| 6 (iii) | - கம்பர் இயற்றிய கம்பராமாயணத்தைப் படித்து சிங்கன் இன்புறுகிறான். | (2 புள்ளி) |
| 6 (iv) | • சிங்கன் தனது உலைக்களத்தில் அமர்ந்து இராமாயணப் பாடல்களை உணர்ச்சிப் பொங்க பாடிக் கொண்டிருக்கிறான்; இரவாகி விட்டதால் துங்குமாறு அவனது மனைவி கூறிச் செல்கிறாள்.<br>• அச்சமயம் அங்கு வந்த கம்பர், இரவு பொழுதாகி விட்டதால் தனக்கு அங்கே தங்கிச் செல்ல அனுமதி கேட்கிறார்.<br>• கம்பர் தனது உலைக்களத்திலேயே தங்கிக் கொள்ளலாமெனச் சிங்கன் கூறுகிறான்.<br>• கம்பரைச் சிங்கனும் அவனுடைய மனைவியும் உணவு கொடுத்து உபசரிக்கிறார்கள். | (3 புள்ளி) |
| **பாகம் 1 - பிரிவு 3 (நாவல்)** | | |
| 7 | - சமுதாயச் சீர்திருத்தம் | (2 புள்ளி) |
| 8 (i) | - நீலகிரிமலை | (2 புள்ளி) |
| 8 (ii) | • பின்னோக்கு உத்தி<br>• கதை கூறுதல் உத்தி<br>• கடித உத்தி<br>• உரையாடல் உத்தி<br>• குறியீடு உத்தி<br>• நனவோடை உத்தி | (2 புள்ளி) |
| 9 (i) | • மன ஆதங்கத்தை வெளிப்படையாகத் தெரிவிப்பவள்<br>• எதையும் எளிதாக நம்புபவள் | (2 புள்ளி) |
| 9 (ii) | - ஈரோடு / வேலய்யனின் வீடு | (2 புள்ளி) |
| 9 (iii) | - வேலய்யன் சினிமா நடிகைகளின் மேல் அதிகம் மோகம் கொண்டு தன்னிலையை மறந்திருப்பதாகக் கயற்கண்ணி எண்ணுகிறாள். | (2 புள்ளி) |
| 9 (iv) | • கயற்கண்ணியோடு வேலய்யன் இன்பமான வாழ்க்கை வாழ்கிறான்<br>• கயற்கண்ணி புத்தகம் படிப்பதில் ஆர்வம் இல்லாதவளாக இருந்தாள். இருப்பினும்,இதழ்களில் உள்ள கதைகள் படிப்பதில் ஆர்வம் கொண்டாள்.<br>• சினிமா துறையில் வேட்கை கொண்டிருந்தாள். பார்த்தப் படங்களையே மீண்டும் பார்த்தாள்.<br>• அவளின் சினிமா மோகத்தைக் கண்டு வேலய்யன் வருத்தங்கொண்டான்.<br>• அவளைத் திருத்தத் தந்திரங்கள் செய்தான்.<br>• சினிமா நடிகைகளைப் பற்றியே புகழ்ந்து பேசினான். | (3 புள்ளி) |

<table>
<tr><th colspan="3">பாகம் 2 - பிரிவு 1 (கவிதை)</th></tr>
<tr><td>10</td><td>முன்னுரை<br>- கவிஞர் – வண்ணக்கவிஞர் கரு.திருவரசு<br>- தலைப்பு – விண்மீன்<br>- பாடுபொருள் – இயற்கை /<br>- மையக்கரு – விண்மீன் காட்டும் பேரழகு<br><br>கண்ணி 1<br>• விண்மீன்கள் கண்களுக்குச் சிறிய அகல்விளக்குகளாகக் காட்சி தருகின்றன<br>• கண் சிமிட்டி அழைக்கும் பொன்விளக்குகளாகவும் தெரிகின்றன<br>• எண்ண முடியாத அளவுக்குக் கோடிக்கணக்கில் வானில் நிறைந்திருக்கின்றன<br>• எண்ணெய் இல்லாமல் எரியும் மின்விளக்குகள் போல பிரகாசிக்கின்றன.<br><br>கண்ணி 2<br>• திரியும் கலமும் இல்லாமல் விண்மீன்கள் திருவிளக்குகளாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன<br>• விண்மீன்களுக்கு ஒளியேற்றும் பணியைச் சூரியன் தன் கடமையாகச் செய்து வருகிறது.<br><br>கண்ணி 3<br>• வானம் எனும் தடாகத்தில் விண்மீன்கள் மீன்களாக உலாவுகின்றன<br>• இன்னும் சிலரோ வானம் எனும் திரையில் ஏற்பட்டுள்ள ஓட்டைகளாக விண்மீன்களைக் கூறுகின்றனர்<br><br>கண்ணி 4<br>• விண்மீன்களை அரும்பு மலர்களாகக் கவிஞர் குறிப்பிடுகின்றார்<br>• நிலவு எனும் பெண் தான் அள்ளி முடித்த கூந்தலை அவிழ்க்கும்போது அத்தருணத்தில் கூந்தலிலிருந்து சிதறி விழும் அரும்பு மலர்களாகக் கவிஞர் விண்மீன்களாகக் குறிப்பிடுகின்றார்.<br><br>கண்ணி 5<br>• விண்மீன்களைக் கோலப் புள்ளிகளாகக் கவிஞர் குறிப்பிடுகிறார்<br>• வானத்தை அகன்ற வாசலாகக் கூறும் கவிஞர், அதன் முற்றத்தில் கோலம் போடுவதற்கு ஒரு பெண் வந்தாள் என்கிறார்.<br>• கோலத்திற்குப் புள்ளிகளை நேர்த்தியாக வைத்தவளின் காதுகளுக்குத் தன் கணவன் தன்னை அன்பாய் அழைத்திடும் குரல் கேட்கவே அப்பொழுதே கோலம் போடும் தனது திட்டத்தினைக் கைவிடுகிறாள்.<br><br>கண்ணி 6<br>• விண்மீன்களைப் பொன்னாகக் குறிப்பிடுகின்றார் கவிஞர்<br>• விண்ணுலகத்தை ஆண்ட பேரரசன் ஒருவன், ஒளி சிந்தும் பொன்னைக் குவித்து வைத்திருந்தானாம்.<br>• ஒரு நாள் ஏதோ ஒரு சிந்தனையில் இருந்தவன், தான் சேர்த்து வைத்திருந்த பொன்னைக் காலால் எட்டி உதைக்கவே அவை வானமெங்கும் சிதறி விட்டனவாம்.<br><br>கண்ணி 7<br>• பெண்கள் அணியும் குழைகளில் வெளிப்படும் மின்னொளியே விண்மீன்கள் என்கிறார் கவிஞர்<br>• நிலவின் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது.<br>• அங்குக் குழைகள் அணிந்த பெண்கள் மகிழ்ச்சியுடன் கும்மியடித்து ஆடிப் பாடுகின்றனர்.<br>• அந்தக் குழைகளில் வெளிப்படும் மின்னொளியே விண்மீன்கள்<br><br>முடிவுரை: ஏற்புடைய விடை</td><td>2 புள்ளி<br><br>கருத்து<br>5x3=15<br><br>முடிவு<br>(2 புள்ளி)<br><br>மொழி<br>(1 புள்ளி)</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 11(i) | **உருவக அணி** (உவமையைப் பொருளில் ஏற்றல்)<br>• "வித்தாய் மடியில் வைத்தாய்"<br>(கரு வித்தாக உருவகம்)<br><br>• "முத்தாய் முல்லைக் கொத்தாய்க் கொஞ்சிமொத்தாய்"<br>(குழந்தை முத்தாகவும் முல்லைப்பூக்களின் கொத்தாகவும் உருவகம்)<br><br>• "விளைந்தாய் மலராய் விரிந்தாய் மணமாய்"<br>(தாய் இன்பத்தைக் கொடுக்கும் மலராக உருவகம்)<br><br>• "விடிந்தாய் எந்தன் பகற்பொழுதாய்"<br>(வாழ்க்கைக்குப் பிரகாசத்தைக் கொடுக்கும் பகல் பொழுதாகத் தாய் உருவகம்)<br><br>• "வழிந்தாய் புனலாய் வளர்த்தாய் பயிரை"<br>(தாய் நீராகவும் குழந்தை பயிராகவும் உருவகம்)<br><br>• "குடும்பத் தேரிழுத் தாய்"<br>(குடும்பம் தேராக உருவகம்)<br><br>• "மருந்தாய் நோயில் விருந்தாய்பசியில்"<br>(தாய் நோய் தீர்க்கும் மருந்தாகவும் பசியைத் தீர்க்கும் விருந்தாகவும் உருவகம்)<br><br>**உவமை அணி** (ஒத்ததை ஒப்பிடுதல்)<br>• "தேனில்குழைத்தாய் சொல்லை நீ மொழிந்தாய்"<br>(தேனில் குழைத்த சொல்போல் மிக இனிமையான சொற்களைக் கூறினாய்)<br><br>**இயல்புநவிற்சி அணி** (ஒன்றின் தன்மையை அப்படியே இயல்பாகக் கூறுதல்)<br>• "சத்தாய் உணவைச் சமைத்தாய்; பிள்ளை<br>சமர்த்தாய் உண்ணச் செய்வித்தாய்"<br><br>**திரிபு அணி**<br>(சீர்களின் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்றி வருதல்)<br><br>• வித்தாய் – பத்தாய், முத்தாய் – மொத்தாய்<br>• தனதாய் – எனதாய், பொழிந்தாய் – மொழிந்தாய்<br>• மருந்தாய் – இருந்தாய், அருந்தாய் – வருந்தாய்<br>• மறைந்தாய் – நிறைந்தாய்<br><br>**பின்வருநிலை அணி**<br>(முந்தைய வந்த சொல் மீண்டும் வருதல்)<br><br>• துயில் நீத்தாய் – உயிர் நீத்தாய் | கருத்து<br>3x3=9<br><br>மொழி<br>1 புள்ளி |
| 11(ii) | • தாயின் அன்பை நினைத்து வியக்கிறேன்<br>• தாயின் தியாகத்தைப் போற்றுகிறேன்<br>• தாயின் பொறுப்பை எண்ணி பெருமை கொள்கிறேன்<br>• தாயின் சுயநலமில்லாத் தன்மையை எண்ணி மகிழ்கிறேன்<br><br>• ஏற்புடைய பிற விடைகள் | கருத்து<br>3x3=9<br><br>மொழி<br>1 புள்ளி |

| பாகம் 2 - பிரிவு 2 (நாடகம்) | | |
|---|---|---|
| 12 (i) | • **புலமையைப் போற்றுபவர்**<br>கம்பர் → சடையப்ப வள்ளல் வீட்டில் ஏர் எழுபது நூல் அரங்கேற்றம் → புலவர்கள் + மக்கள் → கம்பர் உழவர்களையும் உழவுத்தொழிலையும் போற்றிப் பாடுதல் → குணவீரப்பண்டிதர் பாடல்களுக்குப் பொருள் விளக்கம் → கம்பரின் கவிப்புலமையை நெஞ்சாரப் பாராட்டுதல்.<br><br>• **பிறர் நலத்தில் அக்கறை கொண்டவர்**<br>கம்பர் → கவிப்புலமை கொண்டவர் → திருவழுந்தூர் எனும் சிற்றூரில் முடங்கிப் போய் விடக்கூடாது → தானே அரசவைக்கு அழைத்துச் செல்ல விருப்பம் → கம்பர் மறுப்பு (சோழனே வரட்டும் → சோழனிடம் தெரிவித்தல் → பல்லக்கு மரியாதை → கம்பரின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு<br><br>• **குலவேற்றுமை பாராதவர்**<br>குமாரப்புலவர் → கம்பரை 'உவச்சன் மகன்' என இகழ்ந்துரைத்தல் → கம்பரைத் தற்காத்துப் பேசுதல் → கம்பர் இராமாயணம் இயற்றுவதைக் காண உடனே செல்லுதல்<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | 10<br>(3x3=9<br>+ 1<br>மொழி |
| 12(ii) | **மாவண்டூர் சிங்கன் உலைக்களம்**<br>• சிங்கன் எனும் கொல்லனின் வீட்டில் இரவில் தங்குகிறார்<br>• தான் எழுதிய இராமாயணத்தைச் சிங்கன் படித்துப் போற்றுவதைக் காண்கிறார்<br>• தன்னிடத்தில் அவன் கொண்டிருக்கும் பற்றை அறிந்து மகிழ்கிறார்<br>• அவனது தொழில் திறனைப் போற்றி கவி பாடுகிறார்.<br><br>**அம்பர் மாகாளம் – சிலம்பியின் வஞ்சமகள்**<br>• தாம் இயற்றிய இராமாயணத்தில் வரும் சூர்ப்பனகை என்னும் பெண் பாத்திரத்தைக் கொண்டு 'வஞ்சமகள்' எனும் நாடக அரங்கேற்றத்தைக் கண்டு மகிழ்கிறார்.<br>• அதை அரங்கேற்றிய சிலம்பி என்னும் பெண், முன்னொரு நாளில் சோழன் சபையில் நடனமாடித் தம்மிடம் சிலம்புகளைப் பரிசாகப் பெற்ற நடனமணியின் மகள்தான் என்பதை அறிந்து மனம் மகிழ்கிறார்.<br>• அவளை 'அம்பர்சிலம்பி' என வாழ்த்தி விடைபெறுகிறார்.<br><br>**காட்டு வழியில் ராட்டினம் சுற்றும் கிழவி**<br>• கிழவி ஒருத்தி ராட்டையில் நூற் நூற்பதைக் காண்கிறார்<br>• முதுமை காலத்திலும் சுயக்காலில் நின்று வாழும் கிழவியின் பண்பைப் போற்றுகிறார்<br>• கிழவிக்குச் சுதந்திர வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் ராட்டினத்தின் மகிமையை எண்ணி கவிபாடுகிறார்<br><br>**நாட்டரசன் கோட்டை சிங்கராயன் வீடு**<br>• முதுமையினால் உடல்நலம் குன்றிய கம்பர், தமது இறுதிக் காலத்தைப் பாண்டிய நாட்டுக்கு உட்பட்ட நாட்டரசன் கோட்டையில் சிங்கராயன் என்பவனின் வீட்டில் கழிக்கிறார்.<br>• தன்னை வாழ்வித்த சடையப்ப வள்ளலையும் பாண்டியனிடம் போரிட்டுத் தோற்று அவன் தயவால் தலைநகரைத் தானமாகப் பெற்ற குலோத்துங்க சோழனின் இழி நிலையையும் எண்ணிக் கலங்கியபடி இறுதி மூச்சை விடுகிறார்.<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | 10<br>(3x3=9<br>+ 1<br>மொழி |

| | | |
|---|---|---|
| 13(i) | **தமிழ்ப்பற்று கொண்டவன்**<br>• தமிழ்ச் சான்றோரான கம்பரைப் போற்றுகிறான்<br>• இராமாயணம் இயற்றிய கம்பரைத் தன் நாட்டிற்கு வரவழைத்துச் சிறப்பு செய்கிறான்.<br>• தன் மனைவியுடன் சேர்ந்து கம்பரைப் பல்லக்கில் சுமக்கிறான்<br>• கம்பர் அவ்வாறு செய்ய வேண்டாம் எனக் கூறியதற்கு, "நாங்கள் தங்களையா சுமக்கிறோம்? தமிழின் பெருமையை அல்லவா சுமக்கிறோம்" எனக் கூறுகிறான்.<br><br>**வேற்றுமை பாராதவன்**<br>• கம்பர் தன் பகை நாடான சோழ நாட்டைச் சார்ந்தவனாக இருந்தாலும் தன் நாட்டிற்கு வரவழைத்து மகத்தான வரவேற்பு கொடுக்கிறான்<br>• பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்து மதுரை மாநகரைச் சூரையாடி பாண்டியனின் முடிசூட்டு மண்டபத்தையும் இடித்துத் தகர்த்த சோழ நாட்டின் குடிமகனாகத் தான் இருந்தாலும் ராஜாங்கப் பகைமைகளை மறந்து தன் மீது அன்பு செலுத்தும் பாண்டிய மன்னனை நினைத்துக் கம்பர் நெஞ்சம் நெகிழ்கிறார்.<br><br>**மண்ணாசை இல்லாதவன்**<br>• சோழனும் பாண்டியனும் பகை கொண்டு போரிடுவது தனக்கு வருத்தத்தை உண்டாக்குவதாகக் கம்பர் கூறிய பொழுது, குலோத்துங்க சோழன்தான் திரிலோக சாம்ராஜ்ய பதிவியை விரும்புவதால் தன்னரசு செலுத்திவரும் பாண்டிய நாட்டின்மீது போர் தொடுப்பதை விளக்குகிறான்.<br>• பின்னாளில் நடந்த போரில் சோழ நாட்டை வென்றிருப்பினும் அதைக் குலோத்துங்க சோழனுக்கே திருப்பிக் கொடுக்கிறான்.<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | 10<br>(3x3=9<br>+ 1<br>மொழி |
| 13(ii) | • பாடல் உத்தி<br>• தனிமொழி உத்தி (தனக்குத்தானே பேசிக்கொள்ளுதல்)<br>• கதைகூறல் உத்தி (கதைப்பாத்திரங்களே கதையைக் கூறிக் கதையை நகர்த்துதல்)<br>• நிரட்சி உத்தி (ஒவ்வொரு காட்சி தொடக்கத்திற்கும் சூழலாக அமைவது)<br>• பின்நோக்கு உத்தி (கடந்தகால நிகழ்ச்சிகளை பின்நோக்கிப் பார்த்தல்)<br><br>(* உத்திகளுக்கு ஏற்ற எடுத்துக்காட்டுகளை எழுதியிருத்தல் வேண்டும்)<br><br>*(* பிற ஏற்புடைய கருத்துகள்)* | 10<br>(3x3=9<br>+ 1<br>மொழி |

| | | |
|---|---|---|
| 14 | **முன்னுரை :**<br>ஆசிரியர் – டாக்டர் மு.வரதராசன்<br>நாவல் – அகல்விளக்கு<br>கருப்பொருள் – நல்லொழுக்கமும் மனக்கட்டுப்பாடும் நல்வாழ்க்கைக்கு அடித்தளம்<br><br>**கருத்து** :<br><br>**பாக்கிய அம்மையார்**<br>• **அனைவரிடத்திலும் அன்பும் அக்கறையும் கொள்ள வேண்டும்**<br>- வேலய்யன், மணிமேகலையைத் தனது குழந்தைகள் போல் கவனித்துக் கொள்ளல், நோய்வாய்ப்பட்ட வேலய்யனை இரவில் கண்விழித்துக் கவனித்துக் கொள்ளல்<br><br>• **வாழ்க்கை போராட்டங்களைத் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும்**<br>- கணவனை இழத்தல் + தந்தை மரணம் + தம்பி தனிக்குடித்தனம், தனிமரமாக நின்றாலும் வீட்டு வேலை செய்து தன்மானத்துடன் வாழ்க்கையைத் தொடருதல்<br><br>• **தொண்டு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்**<br>- மாலை வேளையில் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடம் நடத்துதல்<br><br>• **வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டு அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்**<br>- மகாத்மா காந்தி, விவேகானந்தர், திரு.வி.க. போன்ற பேரறிஞர்களின் கைவண்ணத்தில் உருவான அறநூல்களை வாங்கிப் படித்துத் தனது அறிவுக் வளர்த்துக் கொள்ளுதல்,<br><br>**இமாவதி**<br>• **செய்நன்றியை மறக்கக் கூடாது**<br>- முரடனிடமிருந்து தன்னைக் காப்பாற்றியதுடன் கணிதப் பாடத்திலும் உதவி புரிந்த சந்திரனை மறக்காமல் வேலய்யனிடம் உயர்த்திப் பேசுதல்<br><br>• **ஆண்களிடம் கட்டுப்பாட்டுடன் பழக வேண்டும்/உறவில் தெளிவு வேண்டும்**<br>- சந்திரனுடன் நெருங்கிப் பழகுதல்; கடற்கரை, சினிமா என ஒன்றாக வெளியே செல்லுதல்; அண்ணனாக நினைத்ததை வெளியே சொல்லவில்லை; சந்திரனின் மனத்தில் ஒருதலை காதல் உருவாகக் காரணமாக அமைதல்<br><br>• **பெரியோரின் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும்**<br>- சந்திரனுடன் அளவறிந்து தெளிவான சிந்தனையுடன் பழகுமாறு தாய் கூறிய அறிவுரைக்குக் கேட்டு நடத்தல்; அண்ணனாக நினைத்துப் பழகுதல்<br><br>**கற்பகம்**<br>• **விரும்பியதை மனதிலேயே பூட்டி வைத்திருக்காமல் துணிவுடன் வெளிப்படுத்த வேண்டும்**<br>- தன் காதலைத் வேலய்யனிடமும் தந்தையிடமும் கூறவில்லை<br><br>• **குடும்பப்பற்று வேண்டும்**<br>- தந்தை சொல் மீறவில்லை; அண்ணன் சந்திரன் நிலை எண்ணி வருந்துதல்<br><br>• **பொறுமை, சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்**<br>- கணவனின் மூடநம்பிக்கையால் விளைந்த செயல்களைப் பொறுத்துக் கொள்ளுதல்; பிரிந்திருக்கும் கணவன் மீண்டும் அழைத்துச் செல்வான் எனக் காத்திருத்தல்<br><br>**வள்ளி**<br>• **வாழ்க்கைப் போராட்டங்களைத் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும்; தற்கொலை கூடாது**<br>- கணவன் சந்திரனின் கொடுமை தாளாது கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்து கொள்ளுதல் | 2<br><br>கருத்து<br>5x3=15<br><br>மொழி 1 |

| | | |
|---|---|---|
| | **• தவறு செய்யும் கணவனை நல்வழிப்படுத்த முயல வேண்டும்**<br>- சந்திரனுக்குப் பயந்து வாழ்தல்; தவறுகளைத் தட்டிக் கேட்கவில்லை<br><br>**கயற்கண்ணி**<br>**• சினிமா மோகம் கொள்ளாமல் குடும்பப் பொறுப்புகளில் கவனம் செலுத்த வேண்டும்**<br>- வேலை முடிந்து வரும் வேலய்யனை அடிக்கடி சினிமாவுக்கு அழைத்துச் செல்ல நச்சரித்தல்<br><br>**• பிறர் நலத்தில் அக்கறை/ இரக்கம் கொள்ள வேண்டும்**<br>- கணவனைப் பிரிந்து வாழும் கற்பகத்தின் நிலையைக் கண்டு இரக்கம் கொள்ளுதல்; வேலய்யனை மாலனிடம் பேசி கற்பகத்தை அழைத்துச் செல்லுமாறு கூறுதல்<br><br>**தாயம்மா**<br>**• கற்புத்திறத்தைப் போற்ற வேண்டும்/ கள்ள உறவு கூடாது/ கணவனுக்கு உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்**<br>- கணவன் சிறையில் தண்டனை மேற்கொண்டிருக்கும் நிலையில் சந்திரனுடன் சேர்ந்து வாழுதல்<br><br>*(* பெண் கதைப்பாத்திரங்களுக்குத் தகுந்த ஏதேனும் 5 கருத்துகள் )*<br><br>முடிவுரை : ஏற்புடைய விடை | |
| 15 | **முன்னுரை :**<br>- ஆசிரியர் – டாக்டர் மு.வரதராசன்<br>- நாவல் – அகல்விளக்கு<br>- கருப்பொருள் – நல்லொழுக்கமும் மனக்கட்டுப்பாடும் நல்வாழ்க்கைக்கு அடித்தளம்<br>- வேலய்யன் இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாக உள்ளான்<br><br>**கருத்து 1**<br>**ஒழுக்கமானவன்**<br>• கல்லூரியில் படிக்கும் சமயத்தில் புகைப்பிடித்தல், பெண்களைப் பார்த்துக் காமக்கிளர்ச்சியான பேச்சில் ஈடுபடுவது, ஆசிரியர்களைப் பற்றி மதிப்புக் குறைவாகப் பேசுவது போன்ற தீயப் பழக்கங்களைக் கொண்ட நண்பர்களிடமிருந்து விலகி இருக்கிறான்.<br>• கல்வியில் மட்டும் முழு கவனம் செலுத்தி பட்டம் பெறுகிறான்; அத்தை மகளான கயற்கண்ணியைத் திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வாழ்கிறான்.<br><br>**இன்றைய இளைஞர்கள் :**<br>வாழ்க்கையில் மனத்தைக் கட்டுப்படுத்தி ஒழுக்கமுடன் வாழ்வது சிறப்பைத் தரும்<br><br>**கருத்து 2**<br>**நட்பைப் போற்றுபவன்**<br>**• உயர்நிலைப்பள்ளியில் சந்திரனுடன் தொடங்கிய நட்பை இறுதிவரை போற்றுகிறான்; சந்திரன் மீது அன்பும் அக்கறையும் கொள்கிறான்.**<br>- கல்லூரியில் தன் நண்பன் சந்திரன் கல்வியில் கவனம் செலுத்தாமல் புறநடவடிக்கைகளில் ஈடுபாடு கொள்வதைப் பற்றி அறிவுறுத்துகிறான்.<br>- காதல் தோல்வியில் மனம் உடைந்திருந்த சந்திரனுக்கு ஆறுதல் கூறுகிறான்.<br>- கல்லூரியைவிட்டுத் தலைமறைவான சந்திரனை முழு மூச்சுடன் தேடிக் கண்டு பிடிக்கிறான்.<br>- சந்திரன் பல பெண்களுடன் தகாத உறவு கொண்டிருப்பதை நினைத்துக் கவலை கொள்கிறான்.<br>- இறுதியில் தொழுநோயாளியாகத் தன்னை நாடி வந்த சந்திரனுக்குத் தன் வீட்டில் அடைக்கலம் கொடுத்து அன்போடு கவனிக்கிறான். | 2<br><br><br>கருத்து<br>5x3=15<br><br><br><br>மொழி 1 |

| | | |
|---|---|---|
| | **• கல்லூரி நண்பனான மாலன் வாழ்க்கையில் அக்கறை கொள்கிறான்**<br>- மூட நம்பிக்கையில் மூழ்கியிருக்கும் மாலனுக்கு உழைப்பே உயர்வு தரும் என்று அறிவுறுத்தி திருத்த முயல்கிறான்.<br>- கல்லூரிப் படிப்பை முடிக்கும் மாலனுக்கு வேலை வாங்கித் தருகிறான்.<br>- தொழிலில் பணநெருக்கடியைச் சந்திக்கும் மாலனுக்குப் பணவுதவி செய்கிறான்.<br>- மாலன் தன் மனைவி கற்பகத்தோடு சேர்ந்து வாழ உதவி புரிகிறான்.<br><br>**இன்றைய இளைஞர்கள் :**<br>நல்ல நட்பைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்<br><br>**விடாமுயற்சி கொண்டவன்**<br>• உயர்நிலைப்பள்ளியில் கணிதப் பாடத்தில் குறைந்த மதிப்பெண்கள் பெற்றாலும் சந்திரனின் துணையுடன் வெற்றி பெற முயற்சி செய்கிறான்.<br>• எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் தோல்வி கண்டாலும் யாருடைய துணையில்லாமல் கண்ணுங்கருத்துமாகப் படித்துக் கல்லூரியில் நுழைகிறான்.<br><br>**இன்றைய இளைஞர்கள் :**<br>விடாமுயற்சியைக் கைவிடக் கூடாது<br><br>**மூட நம்பிக்கைகளை வெறுப்பவன்**<br>• மாலன் கல்லூரியில் படிக்கும் பொழுதே ரிஷியின் பெயரை எழுதுவது, இஷ்ட சித்தி குளிகைகளைக் கையில் கட்டிக் கொள்வது போன்ற மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்திருக்கிறான்.<br>• இத்தகைய நம்பிக்கைகளை வேலய்யன் வெறுக்கிறான்.<br>• உழைப்பே வாழ்க்கையின் உயர்வுக்கு வழிவகுக்கும் என்பதை உணர்த்துகிறான்.<br><br>**இன்றைய இளைஞர்கள்:**<br>வாழ்க்கையில் மூடநம்பிக்கையை விட்டொழித்து உழைத்து வாழ வேண்டும்.<br><br>**குடும்ப உறுப்பினர்களின் மீது அன்பு கொண்டவன்**<br>• முதுகுக் கட்டியால் அவதிப்பட்ட தன் அப்பாவுக்கு உதவியாக மளிகைக் கடை வியாபாரத்தைக் கவனித்துக் கொள்கிறான்.<br>• எளிய வாழ்க்கை வாழும் தன் தங்கைக்குத் தையல்பொறி வாங்கித் தந்து குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள உதவி செய்ய நினைக்கிறான்.<br>• மனைவி மணிமேகலையின் மீது அன்பு செலுத்தி இல்லறத்தை நல்லறமாக வாழ்கிறான்.<br><br>**இன்றைய இளைஞர்கள்** :<br>குடும்பப்பற்றை அதிகரிக்க வேண்டும்<br><br>**பெண்மையைப் போற்றுபவன்**<br>• தன்னைக் குழந்தைப் பருவத்தில் இருந்து அன்புடன் வளர்த்த பாக்கிய அம்மையார் மீது மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளான்.<br>• நுட்பமான அறிவும் தொண்டு மனப்பான்மையும் கொண்டிருக்கும் பாக்கிய அம்மையாரைப் போற்றுகிறான்.<br>• பாக்கிய அம்மையாரைப் பற்றி சந்திரன் தவறாகக் கூறியிருந்ததைக் கேட்டு உள்ளம் நொந்து கொள்கிறான்.<br><br>**இன்றைய இளைஞர்கள்:**<br>- அன்பின் சின்னமாகவும் தியாகத்தின் அடையாளமாகவும் விளங்கும் பெண்மையைப் போற்ற வேண்டும் | |

| | | |
|---|---|---|
| | **கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பவன்**<br>• உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் பொழுது வேலய்யன் சந்திரனைப் போன்று அறிவுத் தெளிவு பெற்றிருக்காவிட்டாலும் விடா முயற்சி கொண்டவனாக இருக்கிறான்.<br>• நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டதால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தோல்வி கண்டாலும் விடாமுயற்சியுடன் படித்து மறு ஆண்டே கல்லூரியில் நுழைகிறான்.<br>• கல்லூரியில் ஒழுக்கத்தைப் பேணிக் காத்ததுடன் கல்வியில் கண்ணுங்கருத்துமாக இருந்ததால் பி.ஏ தேர்வில் வெற்றி அடைந்து பட்டம் பெறுகிறான்.<br>• பி.ஏ முதல்நிலையில் பட்டம் பெற்றிருந்ததால் அரசாங்கத்தில் கூட்டுறவு துணைப்பதிவாளர் பணி கிடைக்கிறது; நல்ல சம்பளத்தில் நிம்மதியான வாழ்க்கை வாழ்கிறான்.<br><br>**இன்றைய இளைஞர்கள் :**<br>கல்வியில் முழு அக்கறை செலுத்த வேண்டும்<br><br>*(* பிற ஏற்புடைய விடைகள்)*<br><br>முடிவுரை : ஏற்புடைய விடை | |